
www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு: 12
மடல் : 12

தி.பி. 2029 : சிலை
கி.பி. 1998 : திசம்பர்

விலை ரூ. 5.00




படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

## ஆற்றுப்படுத்தும்

நவம்பர் '98 இதழில் ஆசிரிய உரை பயனுள்ள ஒன்று. தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு..... இதழ்தோறும் தொடரலாம். படிப்போரை ஆற்றுப்படுத்தும். இதழின் அட்டை மார்க்ஸ், எங்கெல்ஸின் படத்துடன் அமைந்து சிறப்பான தோற்றத்தைக் கொண்டுள்ளது.

**ச. வே. சுப்பிரமணியன்**
தாத்தையங்கார் பேட்டை

பின் அட்டை கவிதை 'சோகத்தில் முடிந்த சொந்த ஊர்ப் பயணம்' நினைவை விட்டு நீங்க மறுக்கும் கவிதை. இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழர்கள் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொடர்ந்து தரவும். தமிழர்களைப் பற்றி காந்தியடிகள் கூறியதைக் கூட இன்றைய காங்கிரஸ்காரர்கள் கூற மறுப்பதுதான் வேடிக்கை. தமிழர் கண்ணோட்டம் உருவத்தில் சிறுத்திருக்கின்றது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையவில்லை.

**- தஞ்சை வளவன், தஞ்சை-6.**

தமிழர் கண்ணோட்டம் இதழ் படிக்கும் வாய்ப்பு தற்செயலாக ஏற்பட்டது. தமிழ் இன விடுதலைக்கு அணி திரட்டும் பணியினைச் செய்ய தமிழர் கண்ணோட்டம் இதழ் அவசியம் எனக் கருதுகிறேன்.

**-இரா. சுகுமாரன்**
பரமக்குடி.

கடந்த நவம்பர் இதழில் தமிழ் அர்ச்சனை பற்றிய தலையங்கம், பெ. மணியரசன் எழுதிய தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு....... கி. வெங்கட்ராமன் எழுதிய அமர்த்தியா சென் பற்றிய கட்டுரை ஆகியவை சிறப்பாக இருந்தன. தென்னாப்பிரிக்க அரசின் கருப்புச் சட்டத்தை எதிர்த்த முதல் தமிழ்ப் பெண் தில்லையாடி வள்ளியம்மை என்பதை தில்லிக்கு உணர்த்திய தமிழர் கண்ணோட்டத்திற்கு என் நன்றிகள் பல.

**கா. வவுனியன்**
திருப்பூர்.

நவம்-98 இதழில் கி. வெங்கட்ராமன் எழுதிய அமர்த்யா சென் கட்டுரையில் ஐந்து வகைச் சுதந்திரங்கள் என்னும் கோட்பாடு சமூகங்களின் பொருளாதாரத்தை ஆய்வு செய்ய ஏற்றதொரு கருவி என்றே சொல்ல வேண்டும். பெ. மணியரசன் தமிழ்த் தேசியத் தோழர்கள் பொருளியல் சிக்கல்களுக்கு உரிய அழுத்தம் தர வேண்டும் என்று கூறியிருப்பதையும் பெட்ரோலியத்துறை அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி தாராள மயமாக்கல் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ராஜீவ் காங்கிரஸ் கட்சியில் தீர்மானம் போட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

**ஹாங்காங் ந. அப்துல் ரகுமான்**

தேசிய இனவிடுதலைக்கு ஆதரவாளர்கள் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்படவேண்டிய அவசரத்தை வலியுறுத்தி தாங்கள் எழுதியிருந்த கட்டுரை சிறப்பாகவும் வரவேற்கத் தகுந்ததாகவுமிருந்தது.

**மோ. மலர்வண்ணன்**
செய்யார்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

திசம்பர் 1998

அனைத்துத் தொடர்புகளுக்கும்
பெ. மணியரசன்
ஆசிரியர்
53 (அ) சமீன்தார் குடியிருப்பு
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001
தொ.பே.: 32994

வெளியிடுபவர்:
அ. பத்மநாபன்
625, என்.வி.என் நகர், திருமங்கலம்,
அண்ணாநகர் (மேற்கு),
சென்னை - 600 043.

அச்சிட்டோர்:
நீட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 003.

வடிவமைப்பு:
காவிரி கணிப்பொறி அச்சு,
தஞ்சாவூர் - 613 001 .

# உள்ளே!

மொன்சன்டோவின் முளைக்காத விதை

சாதி மறுப்புத் திருமணம் செய்தோர் தலை மொட்டை – சாதித்திமிர்

அயர்லாந்து விடுதலைப் போராட்டம்

பெப்ஸி -அண்மைக்கால வரலாறு

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

இளையபெருமாளின் மீசைப்போராட்டம்

அட்டைப்படம்: ஜானகிராமன்

**தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்**
**தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்**

## ஈராக் :

## புதிய ஐ.நா. மன்றம் நிறுவுக

அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகள் 16.12.98 தொடங்கி 19.12.98 வரை ஈராக் மீது வலுவந்தமாக ஏவுகணை மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி தாமாகவே நிறுத்திக் கொண்டுள்ளன.

100 இலக்குகள் மீது மொத்தம் 70 மணி நேரம் நடத்திய இத்தாக்குதல் முழு வெற்றி என்று கூட்டுப் படைகளின் தலைவர் தளபதி ஹென்றி ஷெல்டன் கொக்கரிக்கிறார்.

ஈராக் குடியரசுத் தலைவர் சதாம் உசைனோ, அமெரிக்காவும் பிரிட்டனும் தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தமானது ஈராக் மக்களுக்கு வெற்றி என்று கூறுகிறார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டுச் சதி செய்து முன்னறிவிப்பின்றி ஈராக் மீது போர் தொடுத்தது அநாகரிகமானது, ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்தது; வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்மீது போர் தொடுத்திருக்கக் கூறிக் கொள்ளும் காரணம் என்ன?

உயிர்க் கொல்லி ஆயுதங்களை அதாவது இரசாயன மற்றும் அணு ஆயுதங்களை ஈராக் உற்பத்தி செய்கிறதாம்! 'அகிம்சா மூர்த்திகளான' அமெரிக்காவிற்கு பிரிட்டனுக்கும் இது பிடிக்கவில்லையாம்!

அமெரிக்க நாட்டாண்மைக்கு அடிபணிந்து செயல்படும் ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் ஏற்கெனவே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது.

ஈராக் இரசாயன மற்றும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறதா என்று சோதனையிட ஐ.நா. சார்பில் ஓர் ஆய்வுக் குழுவை ஈராக்கிற்கு அனுப்புவது;



படிப்பகம்

www.padippakam.com

அக்குழு சோதனையிட ஈராக் ஒத்துழைப்பது; ஈராக் மறுத்தால் அதன் மீது ஐ.நா. மன்றம் நடவடிக்கை எடுத்துக் கொள்வது.

ரிச்சர் பட்லர் என்பவர் தலைமையில்ஈராக் சென்ற ஆய்வுக்குழுவில் பெரும்பான்மையினர் அமெரிக்கர்கள்; அஃது ஓர் அமெரிக்கக் குழு என்று சொல்லும்படி இருந்தது. பன்னாட்டுக் குழுவாக இல்லை. அந்த ரிச்சர்டு பட்லர் ஓர் அறிக்கை தந்தார். அதில் ஆயுதச் சோதனைக்கு ஈராக் ஒத்துழைக்க வில்லை என்று கூறியிருந்தார். இது குறித்து ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் விவாதித்து ஒரு முடிவு எடுத்திருக்க வேண்டும். அதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை, அமெரிக்க ஜனநாயகம்.

மனித உரிமைப் பிரகடனம் வெளியிட்டு ஐம்பதாண்டுகள் நிறைவடைவதையொட்டி - மரண தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமைக்குழு கோரியது. அமெரிக்காவில் 38 மாநிலங்களில் மரண தண்டனை உண்டு. இதுபற்றி ஆராய அமெரிக்கா சென்ற ஐ.நா. குழுவை அமெரிக்கர்கள் கண்டித்தனர். செனட் அவையின் வெளி விவகாரக் குழுத் தலைவர் ஜெஸ்சி ஹெல்ம்ஸ்-ஆய்வுக்குழுவைக் கண்டித்ததுடன் அமெரிக்கர்கள் ஐ.நா.வுக்குப் பணம் தரவேண்டுமா என்பதை சிந்திப்பார்கள் என்றும் அறிக்கை கொடுத்தார்.இந்த அமெரிக்கர்கள் தாம் ஈராக்கில் சோதனை செய்வார்களாம்!

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்மீது 16.12.98 அன்று பாய்ந்து பிடுங்கிப் பிராண்டின. இப்போருக்கு 'பாலைவன நரி' என்று இந்த உலக ஓநாய்கள் பெயர் சூட்டிக் கொண்டன. இந்த நரியின் நோக்கம்,ஈராக் ஆயுதத் தளங்களை அழிப்பதும், சதாம் உசேனைக் கொல்வதும் ஆகும்.

இந்த நரி நடவடிக்கையை ரஷியாவும் சீனாவும் கடுமையாகக் கண்டித்தன. இந்தியாவும் கண்டித்தது. ரஷியா தனது அமெரிக்கத் தூதரைத் திருப்பி அழைத்துக் கொண்டது. இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக அரபு நாடுகளில் மக்கள் போராடினர்.

சதாம் உசேன் பின் வாங்கவில்லை. இந்தப் போரை ஈராக் எதிர் கொண்டது. நான்கு நாட்களில் ஈராக் ஆயுதங்களையும், ஆயுதத் தளங்களையும் அழித்து விட்டதாகக் கூறிக்கொண்டு ஆக்கிரமிப்பாளர்கள் போர் நிறுத்தம் அறிவித்து விட்டனர்.

முதற் கோணல் எங்கு தொடங்கியது? ஆயுதச் சோதனை செய்ய ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானம் போட்டதே அங்கு தொடங்கியது. உலக மரண வியாபாரியாகத் திகழும் அமெரிக்கா - உலகத்தில் புல் பூண்டு கூட முளைக்காமல் உயிரினத்தை அழிக்கக் கூடிய அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருக்கும் அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று, ஐ.நா. பாதுகாப்புக்கவுன்சில் ஈராக்கில் ஆயுத் சோதனை செய்யத் தீர்மானம் போட்டபோதே, ஆக்கிரமிப்பு முயற்சி தொடங்கி விட்டது.

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்தபிறகு கேட்பாரும் மேய்ப்பாரும் இல்லாமல் அமெரிக்கா ஆட்டம் போட்டு வருவது உலகம் அறிந்ததே. இருமுனை உலகம் இனி ஒருமுனை உலகம் ஆகிவிட்டது என்று அறிவித்தது அமெரிக்கா. அதாவது அமெரிக்காவின் ஒற்றைத் தலைமையின் கீழ் இயங்கும் உலகம் ஆகிவிட்டதாம். ஆனால் சீனாவோ, பல முனை உலகம் ஆகிவிட்டது என்று கூறி வருகிறது.

ஆங்கிலேயர்களே உலகில் மிகு நாகரிகர்கள் என்றும் உலகை ஆளத்தகுதிபடைத்தோர் என்றும் கருதும் வெள்ளைத் திமிர் அமெரிக்கா, பிரித்தானிய நாடுகளுக்கு எப்போதும் உண்டு.

உண்மையில் பார்த்தால் உலக அரசியலில் மிக அநாகரிகமாக நடந்து கொள்ளும் நாடுகள் அமெரிக்காவும், பிரிட்டனுமே! தென்னாப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறியைக் கடைசிவரை ஆதரித்த நாடுகள் இவ்விரண்டுமே! பாலஸ்தீனச்சிக்கலில் ஆக்கிரமிப்பு நாடான இஸ்ரேலை இன்றும் ஆதரிப்பவை இவ்விரு நாடுகளே! காலனி ஆதிக்கக் கனவு கலையாமல் ஆதிக்க போதையில் ஆட்டம் போடுபவை இவை!

வெள்ளைத் திமிரில் இவ்விரு நாடுகளிலும் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடு கிடையாது. அமெரிக்காவில் இப்போது ஆளுங்கட்சி ஜனநாயகக் கட்சி. இது அந்நாட்டின் குடியரசுக் கட்சியை விட சற்று முற்போக்கான கட்சி என்று சொல்லப்படுவதுண்டு. அப்படி ஒன்றும் இல்லை என்பதை குடியரசுத் தலைவர் பில்கிளிண்டன் மெய்ப்பித்துள்ளார். ஏற்கெனவே, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் ஜார்ஜ்புஷ் இதே போல்,ஆயுத சோதனை சாக்குச் சொல்லி ஈராக் மீது படையெடுத்தார்.

இங்கிலாந்தில் ஆளுங்கட்சி தொழிற்கட்சி. பிற்போக்கு வாதம் பேசும் கன்சர் வேட்டிவ் கட்சிக்குத் தான் இனவாதம் உண்டு என்று சொல்வதுண்டு. ஆனால் அதற்கு சற்றும் குறைந்ததல்ல தொழிற்கட்சி என்பதை அதன் பிரதமர் டோனி பிளேர் நிரூபித்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

மொனிகா லெவின்ஸ்சி என்ற பெண்ணுடன் இருந்த உறவை முதலில் மறுத்துப் பொய்சாட்சியம் அளித்ததற்காகக் கிளிண்டன் மீது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் வந்ததைத் திசை திருப்ப, போர் தொடுக்கப்பட்டது என்பது, அந்த நாளைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணமாக இருக்கலாம். அப் பிரச்சினை இல்லாவிட்டாலும் அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்கும்.

சோவியத் முகாம் வீழ்ந்த பிறகு அரபு முகாம் தங்கள் ஆதிக்கத்திற்கு சவாலாக வந்து விடுமோ என்ற அச்சம் அமெரிக்க பிரித்தானிய வல்லரசுகளை உலுக்குகிறது. அரபுகளை இணைக்கவும் அவர்களுக்கு வலு சேர்க்கவும் இஸ்லாம் இருப்பதும் ஐரோப்பிய - அமெரிக்கக் கனவான்களுக்குப் பீதியூட்டுகிறது.

எண்ணெய் வளத்தால் உலகத்தை ஈர்க்கும் அரபு முகாமைச் சிதறடிக்க, ஒவ்வொரு நாட்டையும் தனிமைப்படுத்தி வீழ்த்த ஒரு காரணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குவைத்தை மீண்டும் ஈராக் ஆக்கிரமிக்கலாம்; குர்தீஸ் தேசிய இனம் ஈராக்கில் ஒடுக்கப்படுகிறது- என்பனவெல்லாம் அமெரிக்காவைப் பொறுத்தவரை சாக்குகளே தவிர உண்மைக் காரணங்களல்ல.

ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்தழிக்கும் சிங்களப் படைக்குப் பயிற்சி தரும் அமெரிக்காவின் யோக்கிதை நமக்கு தெரியாதா? ஈழத் தமிழர்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்காவில் தடை செய்த அதன் தேசிய இனத் தன்னுரிமை ஆதரவுப் பசப்பு நமக்குத் தெரியாதா?

இப்பொழுதுள்ள ஐ.நா. உலகப் போரைத் தடுக்கும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. உலகப் போர் மூளலாம் மூளாமல் போகலாம். இதற்கு வேறு காரணங்களே செயல்படுகின்றன.

தற்போதைய ஐ.நா. மன்றம் உலக அமைதிக்கான நிறுவனமாக செயல்படத் தவறி விட்டது. உலகில் நடைபெறும் சமாதான முயற்சிகளும் அமெரிக்கா மூலம் நடப்பதாக பார்த்துக் கொள்ளப்படுகிறதே அன்றி, ஐ.நா. மூலம் நடப்பதாக அல்ல.

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக ஜிம்மி கார்ட்டர் இருந்தபோது 1976-ல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் உடன்பாடு ஏற்பட்டது. இது கேம்ப் டேவிட் உடன்பாடு. இது ஐ.நா. மூலம் நடைபெறவில்லை. அமெரிக்கா மூலம் நடந்தது.

பாலஸ்தீனத்திற்கும்- இஸ்ரேலுக்கும் நார்வே நாட்டின் மூலம் அமைதிப் பேச்சு வார்த்தை தொடங்கியது. ஆனால் அமெரிக்கா மூலம் தான் இறுதி உடன்பாடு ஏற்பட்டது. முன்னாள் யுகோஸ்லாவியாவில் நடைபெறும் தேசிய இனப் போர்களில் அமெரிக்காவின் தலையீடே முக்கியத்துவம் பெறுகிறது. ஐ.நா.வின் தலையீடு அல்ல. அமெரிக்காவின் தொங்கு சதையாக ஐ.நா. இருக்கிறது. ஐ.நா. பொதுச் செயலாளர் கோஃபி அன்னானுக்குத் தெரியாமலே அமெரிக்கா ஈராக் மீது தாக்குதல் தொடங்கியது. கோஃபி அன்னான் என்ன சொன்னார்? இரவெல்லாம் எனக்குத் தூக்கமில்லை; ஈராக் மக்கள் பற்றியே கவலைப்பட்டுக கொண்டிருந்தேன் என்றார் இதற்கா ஐ.நா. மன்றம்?

ஏகாதிபத்தியங்களுக்கெதிரான போர் விரிவாகவும் வேகமாகவும் நடக்க வேண்டும் அது வெள்ளை இனவாதத்திற்கெதிரான போராகவும் நடக்க வேண்டும்.

ரஷியா, சீனா போன்ற நாடுகள் தற்போதைய ஐ.நா. மன்றத்திலிருந்து வெளியேற வேண்டும். இந்தியா போன்ற நாடுகள் இம் முயற்சியில் துணை சேர்ந்து செயல்பட வேண்டும்.

எனவே புதிய ஐ.நா. மன்றம் ஒன்றை நிறுவ வேண்டும். இரண்டு மூன்று நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடத்தில் புதிய ஐ.நாவுக்கான இடம் வாங்கப்பட்டு அதில் ஐ.நா.நகரம் அமைக்கப்பட வேண்டும். அதற்குத் தனிநாட்டு அங்கீகாரம் வழங்க வேண்டும். தற்போது வத்திகான் நகரத்திற்குத் தனிநாட்டு அங்கீகாரம் இருப்பது போல்! யாசர் அரபாத்தை ஐ.நா.வில் பேச அழைத்தபோது அமெரிக்கா விசா தர மறுத்து விட்டது. அதற்காக ஐ.நா. பொதுச் சபை ஜெனிவாவில் (சுவிஸ்) நடத்தப்பட்டு அராபத் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

அனைத்து உறுப்பு நாடுகளின் சமமான நிதி உதவி, ஐ.நா.நகரில் வசூலிக்கப்படும் வரிகள் ஆகியவற்றின் மூலம் ஐ.நா. மன்றம் செயல்பட வேண்டும். ஐ.நாவுக்கென சொந்தப் படையும் இருக்க வேண்டும்.

நேர்மையும், சமாதான நோக்கமும் கொண்ட புதிய ஐ.நா. மன்ற முயற்சிகளைத் தொடங்க வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# மொன்சன்டோவின் முளைக்காத விதை

- கி. வெங்கட்ராமன்

விதையில்லாத் தக்காளி, விதையில்லாத் திராட்சை, முட்டையிடாத (இறைச்சிக்) கோழி, குஞ்சு பொறிக்காத முட்டை என்று விவசாயிகளும், கிராமப்புறங்களும் பன்னாட்டு தொழில் நிறுவனங்களைச் சார்ந்திருக்குமாறு வைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். அந்த வரிசையில், இப்போது வந்திருப்பது முளைக்காத விதை!

உயிரியல் தொழில் நுட்பத்தைப் (Bio - technology)பயன்படுத்தி விதையின் முளைக்கும் திறனை அழித்து விட முடிகிறது. இதற்கு அத் தாவரத்தின் உயிரணு (ஜீன்-Gene ) அமைப்பில் மாற்றம் செய்யப்படுகிறது. இத் தொழில் நுட்பத்திற்கு உயிர்- பொறியியல் (Bio-enginggering) என்று பெயர். உயிரணுக்கள்தாம் எல்லா உயிரிகளிலும், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு சில மரபுத் தன்மைகளை எடுத்துச் செல்கின்றன. மரபு வழி நோய்களும் கூட இந்த உயிரணுக்கள் மூலம்தான் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன. இவ்வாறான நோயுற்ற உயிரணுக்களிலிருந்து நோய்க் கூறுகளை நீக்குவதற்கு இந்த உயிர்ப் பொறியியல் பயன்படுகிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைவாக உள்ள பயிர்களிலிருந்து, நோயெதிர்ப்பு ஆற்றல் அதிகம் உள்ள பயிர்வகைகளை உருவாக்குவதற்கும் உயிர்ப் பொறியியல் பயன்படுகிறது.

ஆனால், இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உயிரணுக்களில் மலட்டுத் தன்மையைப் புகுத்தி விடவும் முடியும். அப்படி மலடாக்கப்பட்ட உயிரணுவைப் பெற்றத் தாவரங்கள் மலட்டு விதைகளை விளைவிக்கும். இந்த விதைகள் முளைக்கா.

இந்த வகை மலட்டு உயிரணுவுக்கு **'டெர்மினேட்டர் ஜீன்'** (Terminator Gene) எனப்பெயர். தாவர சுழற்சியையே இடையில் அறுத்து விடுவதால் இதற்கு இந்த பெயரிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உருவாகும் மலட்டு விதைகள் அக்கம் பக்கத்து வயல்களிலும் பயிர்களுக்கு மலட்டுத்தன்மையைப் பரப்பி விடும்.

சில மலட்டு உயிரணுக்களுக்கும், அவற்றை உருவாக்கும் தொழில் நுட்ப வழிமுறைகளுக்கும் **மோன்சன்டோ** (Monsonto) என்ற அமெரிக்க நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளது. இந்த மோன்சன்டோ நிறுவனம் தற்போது கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் நுழைந்திருப்பது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அறிவியல் நிலையத்தின் (Indian Institute of Sciences) ஒத்துழைப்பைப் பெற்று மொன்சன்டோ நிறுவனம் கர்நாடகாவின் பெல்லாரியிலும், ஆந்திராவின் ஐதராபாத்திலும் கள ஆய்வு நடத்த பண்ணைகளை நிறுவி உள்ளது.

போல்கார்ட் (Bollgard) என்ற பருத்தி இனத்தில் **"பேசில்லஸ் துரஞ்சியன்சிஸ்"** (Bacillus Thurengiensis- Bt) என்ற வகையை மொன்சன்டோ புதிதாக உருவாக்கி காப்புரிமை பெற்று உள்ளது. இது பூச்சி எதிர்ப்புத் திறனை அதிகம் பெற்றுள்ளதால் சேதாரம் குறைந்து, பருத்தி விளைச்சல் பெருகும் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. இதுவே கேள்விக்குறியது. சீனாவில் இந்த வகை பருத்தி முதலில் பூச்சி எதிர்ப்புத்திறன் பெற்றிருந்தாலும், அடுத்த பருவத்தில் இத்திறனை இழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி, இது மலட்டு விதையை உருவாக்கும் என்ற அச்சமும் பரவியுள்ளது.

இப்பிரச்சினை குறித்து கேள்வி எழுந்தபோது இந்தியப் பத்திரிகைகளுக்கு மொன்சன்டோ நிறுவனம் கொடுத்த விளக்க அறிக்கைகூட இதனை ஐயத்திற்கிடமின்றி விளக்கவில்லை.

இன்னொன்று, இந்த வகைப் பருத்தியோடு, வேறு மலட்டு விதைப் பயிர்களை ஆய்வு செய்து மொன்சன்டோ விற்பனைக்குக் கொண்டு வரும் ஆபத்தும் உண்டு. இதன் மூலம் இவர்களிடமே விதையை மீண்டும், மீண்டும் வாங்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

டங்கல் ஒப்பந்தப்படி ஒரு பயிர்வகையின் உயிரணுவுக்கு ஒரு நிறுவனம் காப்புரிமை பெற்றுவிட்டால் அப்பயிரின் விதைகளை விவசாயிகள் பயன்படுத்த முடியாது. ஆயினும், இந்நிபந்தனையை நடைமுறைப்படுத்துவது எளிதல்ல. ஒவ்வொரு கிராமத்து விவசாயியையும் அந்நிறுவனம் கண்காணிப்பது எளிய பணி இல்லை. ஆனால், இப்போது மலட்டு விதையை உற்பத்தி செய்யும் உயர் விளைச்சல் பயிர்வகைகளை உருவாக்கியிருப்பதால் இது எளிதாகி விட்டது. உயர் விளைச்சல் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் இதனை நாடவேண்டிவரும். இவற்றின் விதைக்காக பன்னாட்டு முற்றுரிமை நிறுவனங்களையே விவசாயிகள் சார்ந்திருப்பர்.

உலகச் சந்தையோடு நமது கிராமத்தை இணைப்பது என்ற பெயரால் உலக முதலாளிகளின் சந்தைச் சூதாட்டத்தில் பகடைக் காய்களாக விவசாயிகள் மாற்றப்பட்டுள்ளனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வேளாண்மை என்பது பெரிதும் மாநில அரசின் அதிகார வரம்புக்குட்டபட்டது. ஆனால் விவசாயத்தில் பன்னாட்டு நிறுவனத்தை நேரடியாக அனுமதிப்பது என்ற முடிவை மாநில அரசுகளுக்குத் தெரியாமலேயே தில்லி அரசு எடுக்கிறது.

இந்தப் பிரச்சினையில் கூட, இந்திய அரசின் உயிரியல் தொழில் நுட்பத்துறை, மொன்சன்டோவுக்கு ஐதராபாத்தில் நுழைய அனுமதி அளித்திருப்பது ஆந்திர அரசுக்கே தெரியாது என்று முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு புகார் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

மொன்சன்டோ நிறுவனத்தின் பண்ணைகளில் புகுந்து கர்நாடக விவசாயிகள் சங்கம் கிளர்ச்சி செய்தது. பெல்லாரியில் இருந்த இப்பண்ணை தீக்கிரையாகியது. ஐதராபாத் விவசாயிகளும் இதுபோன்ற போராட்டம் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து மொன்சன்டோ நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், இந்த ஆராய்ச்சிகள், ஒப்பந்தங்கள், அனுமதி ஆகியவை மக்களுக்குத் தெரியாமல் கமுக்கமாக நடப்பதால் எல்லா நேரத்திலும் இதுபற்றி விழிப்போடு இருக்க வேண்டிய அவசியம் உள்ளது.

வேளாண்மையில் பன்னாட்டு நிறுவனங்களோ அவர்களோடு கூட்டணி சேர்ந்து வடநாட்டு நிறுவனங்களோ நுழைவது சார்புத் தன்மையை அதிகரிக்கும். அவற்றைத் தடை செய்ய வேண்டும்.

அதே நேரம், இந்த மண்ணிற்கே உரிய மரபான தொழில் நுட்பங்களைச் சார்ந்து, தேவையான அளவு மட்டும் மற்ற தொழில் நுட்பங்களை அனுமதிப்பதே சரியானஅணுகு முறையாக இருக்க முடியும். காப்புரிமை வழியில் முற்றுரிமை நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்க்கும் மாற்றுத் தொழில் நுட்பமாகவும் இது திகழும் ●

## சிறையில் அம்பேத்கர் நினைவுநாள்

கடலூர் டிசம்.6 முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல்வேறு அமைப்பைச் சார்ந்த தோழர்கள் இங்குள்ள கலையரங்கில் அம்பேத்கர் நினைவு தினத்தைக் கொண்டாடினர். கூட்டத்திற்கு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சக்திவேல் தலைமை வகிக்க, அவ்வமைப்பின் அரசியல் விவகாரக்குழு உறுப்பினர் குண்டர் சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் உள்ள தோழர் திருவள்ளுவன் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்தார். தோழர்கள் இராசேந்திர சோழன் (த.தே.பொ.க.) பா. கல்யாணி(ம.க.இ.) மு. கந்தசாமி(ந.க.ம.மே.குழு) வழக்கறிஞர் பா. சேட்டு (ம.சி.உ.க.) முரளி (வி.சி) மற்றும் த.மு.மு.க. வைச் சார்ந்த ஒரு பொறுப்பாளர் முதலானோர் உரையாற்றினர்.

பாபர் மசூதி இடிப்புக்குக் கண்டனம், சனநாயக உரிமை மறுப்புக்கு எதிர்ப்பு முதலான சில கோரிக்கைகளை முன்வைத்து காலை, நண்பகல் உணவைப் புறக்கணித்து பட்டினிப் போராட்டமும் இதன் உடன் நிகழ்வாக கூடவே நடந்தேறியது. மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற நிறைவரங்கில் தோழர் திருவள்ளுவன் போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்ற, தோழர் இராசேந்திர சோழன் நன்றியுரை நிகழ்த்தினார்.



படிப்பகம்

www.padippakam.com

# சாதி மறுப்புத் திருமணம் செய்தோர் தலைகள் மொட்டையடிக்கப்பட்டன! திருநல்லூரில் சாதித் திமிர்!

'அலைகள் ஓய்வதில்லை' திரைப்படத்தின் நாயகன் தன்னுடைய பூணூலையும், நாயகி தன்னுடைய சிலுவையையும் கழற்றி எறிவார்கள். 'சொல்லாமலே' திரைப்படத்தின் நாயகன் தன்னுடைய காதலுக்காக நாக்கையே அறுத்துக்கொள்வான். பிரியமுடன் படக் கதாநாயகன் தன்னுடைய காதலுக்கு தடையாக உள்ளவர்களைக் கொலை செய்வான். இவையெல்லம், காதலுக்காக எதையும் செய்யலாம் என்பதை நிருபித்த வெற்றி பெற்ற திரைப்படங்கள். வாழ்க்கையில் காதலித்தவர்களை சமூகம் என்ன செய்கிறது?



புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் (தனித்தொகுதி) சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இலுப்பூர் வட்டம் திருநல்லூர் என்றால் மாரியம்மன் கோவிலும் தை மாதத்தில் நடைபெறும் சிறப்பான மாட்டு வேடிக்கையும் சுற்று வட்டார மக்களுக்கு பளிச்சென்று நினைவுக்கு வரும். ஆனால் தற்போது திருநல்லூர் மாரியம்மன் கோவில் திருவிழாவும், மாட்டு வேடிக்கையும் நடைபெறுமா என்ற சந்தேகம் உள்ளது. மேலும் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற சூழ்நிலை நிலவுகிறது ஏன்?

சேதுராப்பட்டி, மேட்டுக்குளம், அரசப்பட்டி, நாச்சிக்குறிச்சி, ஆச்சநாயக்கன்பட்டி, மேலக்குளம், கலர்ப்பட்டி, திருநல்லூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது திருநல்லூர் (தென்னலூர்) பஞ்சாயத்து. ஆச்சநாயக்கன்பட்டி பள்ளர் சாதியைச் சார்ந்த ராசுவின் இளைய மகன் மாணிக்கம் என்பவர் சுமார் 1½ ஆண்டுகளுக்கு முன்னால் திருநல்லூரைச் சார்ந்த உறவுக்காரர் மருதன் மகள் அங்கம்மாள் என்ற பெண்ணை விரும்பி, திருமணம் செய்து கொண்டார். மூத்தவன் (பால்ராசு) இருக்கும்போது இளையவனுக்கு ஏன் திருமணம் என்று சாதிப் பெரியவர்கள் பஞ்சாயத்துப் பேசி அங்கம்மாளை மாணிக்கத்தின் அண்ணன் பால்ராசுவுடன் இணைத்து வைத்தனர். மாணிக்கத்திற்கு 140 ரூபாய் அபராதம் விதித்தனர். ஆனால் பால்ராசு அங்கம்மாளுடன் வாழவில்லை.

செயற்கைக்கல் தயாரித்து ஆச்ச நாயக்கன் பட்டியிலிருந்து இலுப்பூர் சென்று விற்றுவரும் பால்ராசும் (26) ஈஸ்வரன் கோவில் பஞ்சாயத்தைச் சார்ந்த சங்கரன் பட்டி (சாங்கிராப்பட்டி) பண்டார வகுப்பைச் சார்ந்த மாரிமுத்துவின் மகள் செல்வியும் (20) கடந்த இரண்டாண்டுகளாக காதலித்து வந்தனர். மாரிமுத்து திருநல்லூர் மாரியம்மன் கோவிலில் திருவிழா நாட்களில் சேகண்டி செய்வார். பால்ராசு - செல்வி காதல் மாரிமுத்துவுக்குத் தெரியும்.

இந்நிலையில் 16/11/98 அன்று திருமணம்



படிப்பகம்

www.padippakam.com

செய்து கொள்வதற்காக பால்ராசும், செல்வியும் மணப்பாறை சென்று, பள்ளர் சாதியைச் சார்ந்த சண்முகம் என்பவரிடம் அடைக்கலம் ஆயினர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பால்ராசுவோடு தன்னுடைய மகள் செல்வி சென்று விட்டால் தான் செய்து வரும் கோயில் வேலைக்கு இடையூறு வரும் எனக் கருதி மாரிமுத்து தன்னுடைய மகளை மீட்டுத் தரக்கோரி திருநல்லூர் பஞ்சாயத்தாரிடம் முறையிட்டார்.

சின்னதுரை, மாரிக்கண்ணு உள்ளிட்ட பஞ்சாயத்தார் பலர் மணப்பாறை சென்று பால்ராசு, செல்வி இருவருக்கும் திருமணம் செய்து வைப்பதாகச் சொல்லி திருநல்லூர் அழைத்து வந்தனர். 18/11/98 இரவு திருநல்லூர் வந்தவுடன் இருவரையும் தனித்தனியாக மரங்களில் கட்டிவைத்து அடித்து நொறுக்கினர். காலையில் பஞ்சாயத்து என்று ஆச்சநாயக்கன்பட்டிக்கும், சங்கரன்பட்டிக்கும் சொல்லியனுப்பினர்.

19/11/98 காலையில் பஞ்சாயத்து கூடியது பஞ்சாயத்தில் கள்ளர் சமூகத்தைச் சார்ந்த தெற்குகுளம் மாரிக்கண்ணு, சீனி,பொன்னையா, திருநல்லூர் சின்னதுரை, பழனியப்பன் சேதுராப்பட்டி இராசேந்திரன், எழில்ராஜ், கருப்பன், துரை, ஆகியோரும் கோனார் வகுப்பைச் சார்ந்த ஆச்சநாயக்கன்பட்டி சடையக்கோனார், தங்கராஜ், மூக்கையா ஆகியோரும் பள்ளர் வகுப்பைச் சார்ந்த கலர்ப்பட்டி கந்தன், முருகன் ஆகியோரும் பஞ்சாயத்துப் பேசினர். பஞ்சாயத்தார்கள் பால்ராசுவின் இந்த துணிச்சலுக்கு ஏற்கெனவே வெள்ளாரோடை நாடார் வகுப்பைச் சார்ந்த தனலெட்சுமியைத் திருமணம் செய்து கொண்ட பள்ளர் வகுப்பைச் சார்ந்த சுப்பிரமணியனும், கட்டக்குடி வேளார் வகுப்பைச் சார்ந்த அழகுமணியை திருமணம் செய்து கொண்ட பள்ளர் வகுப்பைச் சார்ந்த ஆறுமுகமும்தான் காரணம் என்று முடிவு செய்து அவர்களை இழுத்துவர ஆணையிட்டனர்.

பால்ராசு, சுப்பிரமணியன், ஆறுமுகம் மூவரையும் கட்டிவைத்து, பள்ளப்பயல்களுக்கு மேல்சாதிப் பெண் கேட்கிறதா, நேற்று நாடார், வேளாளர் பெண்களை இழுத்துக் கொண்டு ஓடியபோது கேட்காததன் விளைவு இன்று பண்டாரப் பெண்ணை இழுத்துக் கொண்டு போகிறீர்கள், இப்படியே விட்டால் நாளை கள்ளர், கோனார் வீட்டுப் பெண்களை இழுத்துக் கொண்டு செல்ல மாட்டீர்கள்



என்பதற்கு என்ன நிச்சயம் என்று கூறி அடித்தனர். குறுக்கே விழுந்து தடுக்கச் சென்ற பஞ்சம்மாள் என்ற பெண்ணுக்கும், பொன்னையா என்பவருக்கும் பலத்த அடிவிழுந்தது.

பஞ்சாயத்தார் மேற்கண்ட மூவருக்கும் தலா 20,000 ரூபாய் அபராதம் விதித்தனர். அபராதம் அதிகம் என்று பஞ்சாயத்தில் உள்ள கந்தனும், முருகனும் எதிர்ப்பு தெரிவித்தனர். பஞ்சாயத்தில் உள்ள மற்றவர்கள் அபராதம் கட்டவில்லையென்றால், மூவருக்கும் மொட்டையடித்து கோவிலைச்சுற்றி அங்கபிரதட்சணயம் செய்ய உத்தரவிட்டனர். கந்தனும், முருகனும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோது எதிர்ப்பவன் எல்லோருக்கும் மொட்டை அடிங்கடா என்று ஆவேசக்குரலெழுப்பினர். மூவருக்கும் மொட்டையடிக்க மறுத்த பள்ளர் வகுப்பைச் சார்ந்த மாரிமுத்துவை மிரட்டி மூவருக்கும் மொட்டையடித்தனர். செல்வியை தந்தையாரோடு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் நடைபெற்ற நேரத்தில் திருநல்லூர் பஞ்சாயத்து தலைவர் பழனிவேலு (தி.மு.க.) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் சேகர்(தி.மு.க.) இருவரும் வெளியூர் சென்றிருந்தனர். இருவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் இருவரும் ஊருக்குத் திரும்பிய பிறகும்.



படிப்பகம்

www.padippakam.com

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மூவரும் இலுப்பூர் காவல் நிலையத்தில் கள்ளர், மற்றும் கோனார் வகுப்பைச் சார்ந்த 12 பேர் மீது புகார் செய்தனர். காவல்துறையினர் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெரியவர்களை அழைத்து புகார் செய்தவர்களோடு பேசி புகாரை வாபஸ் வாங்க வலியுறுத்தினர். வாபஸ் வாங்க மறுத்தவுடன், செல்வியை பால்ராசு கடத்தியதாக வழக்குப் பதிவு செய்து, கைது செய்ய முயன்றனர். பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது. இச்சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் புதுக்கோட்டை ஸ்டெப்ஸ் பெண்கள் மையம் ஷெரிஃபாவையும், கலப்புத்திருமணத் தம்பதிகள் சங்க செயலாளர் நல்லதம்பியையும் அணுகினர். இவர்கள் மூலமாக தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து இராசேந்திரன், துரை , மாரிக்கண்ணு, மூக்கையா நால்வரையும் காவல்துறையினர் கைது செய்தனர். மற்றவர்கள் மீது இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சி.பி.எம். தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவில்லை. இப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் கவிதைப் பித்தன் கூட செல்லவில்லை.

இப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்க சாதிகளுக்கு அஞ்சி வாழ்கிறார்கள். தமிழக அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு குற்றவாளிகளை உடனே கைது செய்வதோடு, திருநல்லூர் மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் தென் மாவட்டக் கலவரம் போல, இங்கும் சாதிக் கலவரம் தோன்ற காவல்துறையும் தமிழக அரசுமே காரணமாக அமையக்கூடும்.

– நா. வைகறை, மி.ச. மாரிமுத்து

**தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு....**
கட்டுரை அடுத்த இதழில் வரும்
- ஆசிரியர்

### *வெண் மணித் தீ*

*1968 டிசம்பர் 25, நிலக்கிழமை ஆதிக்கமும் சாதி ஆதிக்கமும் ஒருடம்பெடுத்து கூத்தாடிக் கொளுத்திய கோரத் தீ. நள்ளிரவில் கொழுந்து விட்டெரிந்த அந்தத் தீயில் 44 உயிர்கள் வெந்து சாம்பலாயின. உழவுத் தொழிலாளிகளாகவும் ஒடுக்கப்பட்ட சாதியினராகவும் ஒரு சேர நசுக்கப்பட்ட மக்கள் வெந்து மடிந்தனர்.*

*வெண்மணியில் மாண்டவர்கள் மீண்டும் வருகிறார்கள்.... வெவ்வேறு பெயர்களில்!*

*தமிழ்த் தேசியம் - சாதி ஒழிப்பு - சமதர்மம் என்று பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி வருகிறார்கள்.*

*21 ஆம் நூற்றாண்டில் புதிய தமிழன் - புதிய தமிழச்சி- புதிய தமிழ்த் தேசம் வார்க்கப்பட வெண்மணியில் மாண்டவர்கள் மீண்டு வருகிறார்கள்... வெவ்வேறு பெயர்களில்!*

*த.தே.பொ.க. அமைப்புகள் வழக்கம் போல் செங்கொடி ஏற்றி தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துக.*

### *சாதி மறுப்புத் திருமணம்*
### *மணமகள் தேவை*

*ஈரோட்டில் தனியார் நிறுவனமொன்றில் கட்டடப் பொறியாளராகப் பணிபுரியும் மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பட்டம் பெற்ற நாத்திகம் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வுள்ள 34 ½ வயதுள்ள இளைஞரை சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ள மணமகள் தேவை. மணமகள் குறைந்த பட்சம் பட்டப் படிப்பும், சாதி மத மூட நம்பிக்கை எதிர்ப்பும் கொண்டவராக இருத்தல் வேண்டும். விரும்புவோர் தொடர்பு கொள்க.*

*- தமிழர் கண்ணோட்டம்*
*53(அ) சமீன்தார் குடியிருப்பு*
*புது ஆற்றுச் சாலை,*
*தஞ்சாவூர் - 613 001.*



படிப்பகம்

www.padippakam.com

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-3

- எஸ்.வி. ராஜ துரை

## 17-18 ஆம் நூற்றாண்டுகளின் ஒடுக்குமுறைச் சட்டங்களும் மக்கள் போராட்டங்களும்

1641-42 -ல் அயர்லாந்தில் நடந்த தேசிய விடுதலைக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டபின் இங்கிலாந்து நாடாளுமன்றம் 1652 ஆகஸ்டில் 'குடியேற்றச் சட்டத்தைக்' (Act of settlement) கொண்டு வந்தது. அது, அயர்லாந்தில் ஆங்கிலேய வந்தேறிகள் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாத வன்முறை ஆட்சியைச் சட்டபூர்வமானதாக்கியது. ஆங்கிலேய பூர்ஷ்வா வர்க்கமும் பூர்ஷ்வாப் புரட்சியின் காரணமாக புதிதாக பூர்ஷ்வாத் தன்மையாக்கப்பட்ட பிரபுக் குலத்தினரும் அயர்லாந்து மக்களின் நிலங்களை ஒட்டுமொத்தமாகக் கொள்ளையடிப்பதற்கு அச் சட்டம் ஒப்புதலளித்தது. அயர்லாந்து மண்ணின் மக்களை கலகத்திலீடுபடும் குற்றவாளிகள் என்று கருதப்பட்ட அச்சட்டம், கிளர்ச்சியில் நேரடியாக ஈடுபடாத, ஆனால் இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்குப் 'போதிய விசுவாசம்' காட்டாத அயர்லாந்துக்காரர்களைக் கூட குற்றவாளிகளாகக் கருதியது. அவ்வாறு கருதப்பட்டவர்களுக்கு மரணதண்டனை நாடுகடத்துதல், உடைமைகளைப் பறிமுதல் செய்தல் என்ற பல்வேறு வகைத் தண்டனைகள் அச்சட்டத்தின்படி தரப்பட்டன. அச்சட்டத்திற்கு உறுதுணையாக நிறைவுச் சட்டம் (Act of satisfaction) என்ற சட்டம் 1613 இல் கொண்டு வரப்பட்டது. அச்சட்டத்தின்படி, உடைமைகள் பறிக்கப்பட்ட அயர்லாந்து மக்கள், அந்நாட்டின் வறட்சிப் பகுதிகளிலும் சதுப்பு நிலங்களிலும் வலுக்கட்டாயமாகக் குடியேற்றப்பட்டனர். அங்கு செல்ல மறுத்தவர்கள் மரண தண்டனை பெற்றனர். கைப்பற்றப்பட்ட நிலங்களை, இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு (அரசாங்கம்) கடன் வழங்கியவர்கள், ஆங்கிலேய இராணுய அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோருக்குப் பகிர்ந்தளிப்பதற்கான செய்முறைகளை அச்சட்டம் வகுத்துத் தந்தது. அயர்லாந்தில் ஆங்கிலேய நிலப் பிரபுத்துவத்தின் பொருளாதார அடிப்படையை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் இவ்விரு சட்டங்களும் வழிவகுத்தன.[33]

அயர்லாந்தில் காவல் துறையினரின் கண்மூடித்தனமான, தன்னிச்சையான ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான ஐரிஷ் மக்கள் போராட்டங்களின் காரணமாக இங்கிலாந்து நாடாளுமன்றம் 1679 இல் 'ஹேபியஸ் கார்பஸ்' சட்டத்தை இயற்றியது. யாரேனும் கைது செய்யப்பட்டால் அதற்கான காரணங்களை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். கைது செய்யப்பட்டவரைக் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வழக்கு மன்றத்துக்குக் கொண்டுவராவிட்டால் அவரை விடுதலை செய்து விடவேண்டும் என்று அச்சட்டம் கூறியது. ஆனால் அந்தச் சட்டத்தை இடை நீக்கம் செய்யும் அதிகாரம் இங்கிலாந்து நாடாளுமன்றத்திடம் இருந்ததால் அயர்லாந்திலிருந்த ஆங்கிலேய ஆளும் வர்க்கங்கள் இழைத்த கொடுமைகளை அச் சட்டத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை.[34] பத்தொன்பதாம் நூற்றாண்டில் 12 ஆண்டுகள் நீங்கலாக மற்றெல்லா ஆண்டுகளிலுமே அச்சட்டம் இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தது.

இங்கிலாந்தில் அரசியல் சட்டத்திற்குட்பட்ட முடியாட்சி முறை நிறுவப்பட்ட 1689 இல் முடிமன்னன் ஆரஞ்சு இளவரசன் வில்லியமால் நிரந்தரக் கலகத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆங்கிலேயப் பேரரசின் நிலையான இராணுவத்தின் அளவு,அதன் நிதியாதாரங்கள் ஆகியவற்றின் மீது இங்கிலாந்தின் நாடாளுமன்றத்திற்கிருந்த கட்டுப்பாட்டை வலுப்படுத்திய அச்சட்டம் அயர்லாந்திலும் பிரிட்டனின் பிற குடியேற்ற (காலனி) நாடுகளிலும் பெருமளவில் இராணுவப் படைகளை வைத்திருக்கவும் இராணுவத்திற்குள் கலகம் செய்பவர்களை இராணுவ நீதிமன்றத்தின் மூலம் விசாரணை செய்வதற்கும் ஒப்புதல் தந்தது. 1665 இல் இயற்றப்பட்டஒருசட்டம் அயர்லாந்து மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு, ஸ்டுவர்ட் மன்னர்களின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களை ஒரிருவர்க்குத் திருப்பித் தருவதற்கு இருந்த வாய்ப்புகளை முற்றாக நீக்கி விட்டது.[36]

கத்தோலிக்க மக்களின் சதிவேலைகளை



படிப்பகம்

www.padippakam.com

முறியடித்தல் என்ற பெயரால் 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18 ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் தண்டனைச் சட்டத் தொகுப்பும் (Penal code) தண்டனைச் சட்டங்களும் (Penal Laws) ஆங்கிலேய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன. அச்சட்டங்கள் கத்தோலிக்கர்களின் குடிமை, அரசியல் உரிமைகளைப் பறித்தன. கத்தோலிக்கர்கள் சொத்து சேர்த்தல், சொத்தை சுவீகரித்தல், சொத்துக்களை பிறருக்கு மாற்றுதல் ஆகியவற்றை வரம்புக்குட்படுத்தின. கத்தோலிக்கர்கள் இழைக்கும் சிறு குற்றங்களுக்கும் கூட தண்டனையாக அவர்களது உடைமைகளைப் பறிப்பது என்பது சட்ட பூர்வமாக்கப்பட்டது. ஏற்கெனவே நிலங்கள் பறிக்கப்பட்டபிறகும் இன்னும் கொஞ்ச நஞ்சம் நில புலன்களை வைத்திருந்தவர்களின் நிலங்களையும் பறித்துக் கொள்ள அச்சட்டங்கள் ஒப்புதல் தந்தன. ஆங்கிலேய நிலவுடைமை யாளர்களையே கத்தோலிக்க விவசாயிகள் என்றென்றும் சார்ந்து நிற்க வேண்டிய வகையில் குத்தகை நிபந்தனைகளைக் கடுமையானவையாக்கின. ஐரிஷ் தேசிய மரபுகளைத் துடைத்தெறிவதற்காக கத்தோலிக்கப் பள்ளிகளைத் தடைசெய்த அச்சட்டங்கள் மூலம் கத்தோலிக்கப் பாதிரியார்களுக்குக் கொடுந் தண்டனைகள் வழங்கப்பட்டன. தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியின் காரணமாக அச்சட்டங்களின் ஒரு பகுதி 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ரத்து செய்யப்பட்டது.[37]

அயர்லாந்தில் நிறுவப்பட்ட ஆங்கிலோ - ஐரிஷ் நாடாளுமன்றத்தில் கத்தோலிக்க மக்களுக்குப் பிரதிநிதித்துவமோ உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமையோ இருக்கவில்லை. 1727 இல் இங்கிலாந்து நாடாளுமன்றம் தேர்தல்களை முறைப்படுத்தும் சட்டமொன்றை இயற்றியது. அச்சட்டம் ஐரிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் கத்தோலிக்கர்களின் வாக்குரிமையை மறுக்கும் முறையை அதிகாரப்பூர்வமானதாக்கியது. 17 -ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே கத்தோலிக்கர்கள் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டு வந்தது. அதற்குக் காரணம், அயர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கத்தோலிக்கக் கோட்பாடுகளை உதறித் தள்ளிவிடுவதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நியதி நடைமுறைப்படுத் தப்பட்டதுதான். கத்தோலிக்கர்களுக்கு வாக்குரிமை 1793 இல் தரப்பட்டது. அதற்குக் காரணம் தமக்கிடையே ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு தேர்தலில் நிற்க விரும்பிய ஆங்கிலேய நிலப்பிரபுக்களுக்கு வாக்காளர்கள் நிறையத் தேவைப்பட்டதுதான். எனவே கத்தோலிக்க விவசாயிகளுக்கு வாக்குரிமை தரப்படுவதை அவர்கள் விரும்பினர். (1829 இல் தான் கத்தோலிக்கர்களுக்கு தேர்தலில் நிற்கும் உரிமை தரப்பட்டது[38].

தங்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் மத பண்பாட்டு பாரபட்சக் கொள்கைகளையும் எதிர்த்து கத்தோலிக்கர்கள் 18 ஆம் நூற்றாண்டில் பல வகைகளிலும் போராடி வந்தனர். 1750 இல் கத்தோலிக்க நில உடைமையாளர்கள், வணிகர்கள் பட்டறை உற்பத்தியாளர்கள், அறிவாளிகள் ஆகியோர் உறுப்பினர்களாக அமைந்த கத்தோலிக்கர்குழு (Catholic Committee) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. கத்தோலிக்கர்களுக்கு நிவாரணம் தேடுவதும் தண்டனைச் சட்டங்களை நீக்குவதற்குப் போராடுவதும் அந்த அமைப்பின் நோக்கங்களாக இருந்தன. தொடக்கத்தில் அவர்கள் ஆங்கிலேய அதிகாரிகளைப் பொறுத்தவரை மிதவாத, விசுவாசப் போக்குடையவராக இருந்தனர். ஆனால் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேசிய போராட்ட எழுச்சி தீவிரமடைந்த போது அந்த அமைப்பின் உள்ளடக்கமும் மாற்றம் பெற்றது. ஐரிஷ் பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்கான பிரிவினர் அந்த அமைப்பில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அப்பிரிவின் இடதுசாரிகள் பின்னர் ஐக்கிய ஐரிஷ் மக்கள் (United Irishmen) என்ற அமைப்பில் சேர்ந்தனர். புரொடெஸ்டெண்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் சரிசம உரிமை வேண்டும் என்பதற்காக இந்த அமைப்பு மேற்கொண்ட முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை நீடித்தன.[39]

டப்ளின் நகரில் 1789 இலும் பெல்பாஸ்ட் நகரில் 1789 இலும் முறையே விக் சங்கமும் (Whig club) வடபகுதி விக் சங்கமும் (Northern whig club) அமைக்கப்பட்டன. பல்வேறு அரசியல் போக்குகளைக் கொண்டிருந்த உறுப்பினர்கள் அவற்றில் இருந்தனர். அவற்றிலிருந்த புரொட்டெஸ்டண்ட் தலைவர்களோ அச்சமயத்தைச் சேர்ந்த தாராளவாத நிலப்பிரபுக்கள் பெரும் பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் நலன்களை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்தனர். ஆங்கிலேய அரசாங்கத்துடன் சமரசம் செய்து கொள்ளவும் தேசிய இயக்கத்தை கறாரான அரசியல் சட்ட வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்கவும் விரும்பினர். ஆனால் அச்



படிப்பகம்

www.padippakam.com

சட்டங்களின் தலைமையிலிருந்த முற்போக்கான பகுதியோ, உறுதியான நடவடிக்கைகளை ஆதரித்தது. அப்பகுதிதான் பின்னாளில் உருவான' ஐக்கிய ஐரிஷ் மக்கள்' அமைப்பின் கருவாக அமைந்தது. [40]

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 18 ஆம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளிலும் காலனியாதிக்க வாதிகளுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் எதிராகப் போராட்டம் நடத்திய ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு ஆட்சியாளர்கள் சூட்டிய பெயர் டோரிக்கன். டோரி (Tory) என்ற கெல்ட்டிக் (ஐரிஷ்) மொழிச் சொல்லுக்கு 'மூர்க்கன்' என்று பொருள். 'டோரி'க்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். நிலங்களை இழந்த ஐரிஷ் பிரபுக்கள்தான் அவர்களது தலைவர்கள். 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ரப்பாரிகள்(rapparees) எனப்படும் ஐரிஷ் விவசாயிகளை மட்டுமே கொண்ட விடுதலைப் படைகள் உருவாக்கப்பட்டன. டோரிக்களையும் ரப்பாரிகளையும் ஒடுக்குவதற்கு ஆட்சியாளர்கள் கையாண்ட முறைகள் கொடூரமானவை. அவர்கள் கையில் அகப்பட்டவர்கள் தூக்கிலிடப்பட்டனர்; வண்டிச்சக்கரங்களிலும் குதிரைகளிலும் கட்டி வைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். இராணுவ முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். அவர்களைப் பற்றிய தகவல்கள் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்பட்டது. அதைவிட மோசமான காரியம் என்னவென்றால், டோரிக்கன் என்ற சொல், இங்கிலாந்தில் அரசியல் எதிராளிகளை அவதூறு செய்வதற்காகப் பயன்படலாயிற்று. இங்கிலாந்தில் அச்சமயம் இருந்த முதன்மையான அரசியல் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியினருக்கு அவர்களது அரசியல் எதிராளிகளான விக் கட்சியினர் (இவர்களுக்கும் அயர்லாந்தில் அழைக்கப்பட்ட விக் சங்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை) டோரிக்கன் என்ற கேலிப் பெயரைச் சூட்டினர் [41].

கத்தோலிக்க ஐரிஷ் மக்களின் நிலங்கள் ஆங்கிலேயர் கைக்கும் புரொடெஸ்டெண்டுகளுக்கும் போய்ச் சேர்ந்ததை நாம் குறிப்பிட்டோம். நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களை குத்தகைக்கு எடுத்த இடைத்தரகர்கள் மிகவும் ஏழ்மைப்பட்ட விவசாயிகளுக்குத் துண்டு துக்காணி நிலங்களை (அரை ஏக்கர் வரை) உள் குத்தகைக்கு விட்டனர். மிகக் கடுமையான நிபந்தனைகளுக்குட்பட்ட அந்த உள் குத்தகை முறை அயர்லாந்தில் மிகப் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்தது. அந்தத் துண்டு நிலங்களில் தானியங்களையும் விதைக்கலாம் என்று காலனியாட்சியாளர்கள் 'பெருந்தன்மையுடன்' ஒரு சட்டத்தை இயற்றியதால் அந்த நிலங்கள் தானிய ஏக்கர் என்ற பெயர் பெற்றன. [42]

அயர்லாந்து மண்ணை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கி ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1703 இல் மொத்த நிலங்களில் 14% மட்டுமே கத்தோலிக்க ஐரிஷ் மக்களிடம் இருந்தது [43]. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்திலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் மாற்றங்கள் அயர்லாந்தின் எதிர் காலத்தையும் தீர்மானிப்பவையாக இருந்தன. அந்நாடுகளில் ஏற்பட்ட விவசாய, தொழிற் புரட்சிகளின் விளைவாக முலாளித்துவ உற்பத்தி முறையும் முதலாளித்துவ உடைமையாளர் தொழிற்துறைப் பட்டாளிகள் என்ற இரண்டு முதன்மையான சமூக சக்திகளும் (வர்க்கங்கள்) உருவாயின. அந்த மாற்றங்களின் தாக்கம் அயர்லாந்திலும் உணரப்பட்டது. அதுவரை அயர்லாந்தில் ஆளும் வர்க்கத்தினராக இருந்த ஆங்கிலேய, புரொடெஸ்டெண்ட் பிரபுக்கள் நிலவுடைமையாளராகவும் ஆங்கிலேய அரசின் அரசியல் ஆளுகைக்கு உட்பட்டவராகவும் இருந்து வந்தனர். ஐரிஷ் மக்களின் உழைப்பைச் சுரண்டி அவர்கள் வாழ்ந்து வந்த போதிலும் அந்தச் சுரண்டல் மூலம் பெறப்பட்ட உபரிமதிப்பு அப்பிரபுக்களின் பகட்டு வாழ்வுக்கே பயன்பட்டது. ஆனால் 17-18ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அயர்லாந்தில் உற்பத்தி உறவுகள் மாற்றம் கண்டன. புதிய ஒடுக்குமுறைகளும் தோன்றின. விவசாய விளை நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்பட்டன. இங்கிலாந்தின் சந்தைக்குத் தேவைப்பட்ட பாலும் மாட்டிறைச்சியும் உற்பத்தி செய்கிற நாடாக அயர்லாந்து உருமாற்றப்பட்டது. நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையின் நிழலில் புதிய, முதலாளித்துவ ஒடுக்குமுறையும் வளரத் தொடங்கியது. ஐரிஷ் விவசாயக் கூலிகள் நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். நிலப்பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு மேய்ச்சல் பண்ணைகள் உருவாக்குப்பட்டன. ஆங்கிலேய நிலப்பிரபுத்துவச் சக்திகள் இங்கிலாந்தின் சந்தைகளுக்குத் தேவைப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் தரகு வாணிபர்களாயின. நிலம் மூலதனமாக மாறியது.

18 ஆம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில் அயர்லாந்து முழுவதிலும் தேசிய விழிப்புணர்ச்சியும்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலையுணர்வும் மேலோங்கி நின்றன. அந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பிரெஞ்சு அறிவியக்கப் புரட்சிகளும் ஐரிஷ் மக்கள்மீது தாக்கம் ஏற்படுத்தியிருந்தன. பிரிட்டனின் பிரித்தாளும் சூழ்ச்சி இனி பலிக்காது என்ற எண்ணம் தோன்றுகின்ற வகையில் புரொடெஸ்டெண்ட் ஐரிஷ் மக்களின் ஒரு பகுதியினரும்(விக் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்) கத்தோலிக்கர்களும் (கத்தோலிக்கர் குழுவைச் சேர்ந்தவர்களும்) முன்னர் நாம் குறிப்பிட்ட 'ஐக்கிய ஐரிஷ் மக்கள்' (United Irishmen) என்ற அமைப்பை 1791 இல் பெல்பாஸ்ட் நகரில் நிறுவினர். சுதந்திர ஐரிஷ் குடியரசை நிறுவப் போவதாக அறிவித்து நாடு தழுவிய போராட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்துவந்தனர். ஆனால் கிளர்ச்சி நடக்கவிருக்கும் தருவாயில் அரசாங்க உளவாளிகள். கொடுத்த தகவலின் காரணமாக அந்த அமைப்பின் தலைவர்களில் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு விட்டனர். எனினும் மே 23 ஆம் தேதி நிகழ்ந்த ஆயுத மேந்திய கிளர்ச்சி 1798 ஜூன் வரை நடந்தது. வட அயர்லாந்துப் பகுதியில் தீ போல் பரவிய அக் கிளர்ச்சியில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் ஐரிஷ் விவசாயிகளும் நகர்ப்புற ஏழை மக்களுமேயாவர். கிளர்ச்சி மேலும் பல இடங்களுக்குப் பரவியது.[44]

இதற்கிடையே ஆங்கிலேய ஆளும் வர்க்கங்களும் பிற்போக்கு புரொடெஸ்டெண்டு ஐரிஷ் நிலப்பிரபுக்களும் சேர்ந்து ஐரிஷ் புரொடெஸ் டெண்டுகளுக்கும் ஐரிஷ் கத்தோலிக்கர் களுக்குமிடையே பகைமையையும் மோதலையும் உருவாக்க இயன்றதனைத்தையும் செய்தனர். 1780 இல் அவர்கள் பீப். ஓ.டே. பாய்ஸ் ('Peep-O-Day Boys) என்ற இரகசிய பயங்கரவாத புரொடெஸ்டெண்ட் அமைப்புகள் உருவாக உதவி புரிந்தனர். அந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் பொழுதுவிடிந்ததும் கத்தோலிக்கர்களின் வீடுகளில் புகுந்து அங்கு ஆயுதங்கள் உள்ளனவா என சோதனையிடவும் உடைமைகளை நாசமாக்கவும் செய்வர். அத்தகைய பயங்கரவாத அமைப்புகளிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள 1780 களிலும் 1790 களிலும் பாதுகாப்பாளர்கள் என்ற அமைப்பினைக் கத்தோலிக்கர்கள் உருவாக்கினர். அந்த உறுப்பினர்களில் பலர் 1798 ஆம் ஆண்டுத் தேசிய விடுதலைக் கிளர்ச்சியில் கலந்து கொண்டவர்களாவர்.[45]

1798 ஆம் ஆண்டின் ஐரிஷ் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றொரு வன்முறை அமைப்பு ஆரஞ்சு அமைப்பு (Orange Order) என்பதாகும். இங்கிலாந்தில் அரசியல் சட்டத்திற்குட்பட்ட முடியாட்சி முறையின் கீழ் முடிமன்னனாகிய ஆரஞ்சு இளவரசன் மூன்றாம் வில்லியமின் பெயரில் 1795 இல் உருவாக்கப்பட்ட அந்த அமைப்பினை ஆங்கிலேய அதிகாரிகள், நிலப்பிரபுக்கள், புரொடெஸ்டெண்ட் மதகுருக்கள் ஆகியோர் பயன்படுத்தினர். அந்த அமைப்பு சமூதாயத்தின் அடித் தட்டுகளிலிருந்தும் ஐரிஷ், ஆங்கிலேய உறுப்பினர்களைச் (புரொடெஸ் டெண்டுகளை) சேர்த்துக் கொண்டது. ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு எதிராகப் புரொடெஸ்டெண்டுகளைத் திட்டமிட்ட வகையில் தூண்டிவிட்டுக் கொண்டிருந்த ஆரஞ்சு அமைப்பு; புரொடெஸ்டெண்டுகள் பெரும்பான்மையினராக உள்ள வட அயர்லாந்தில்தான் பெரும் செல்வாக்கும் பெற்றிருந்தது. (அது இன்று வரை அங்கு வலுவாக இயங்கிக் கொண்டிருக்கிறது)[46].

1798 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது கத்தோலிக்கர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தல் என்ற பெயரால் ஆங்கிலேயத் துருப்புகளுடன் சேர்ந்து ஆரஞ்சு அமைப்புக் காடையர்களும் ஐரிஷ் மக்களைச் சித்திரவதை செய்து கொன்றனர்; அவர்கள் வீடுகளை எரித்துச் சாம்பலாக்கினர். மிரட்டல் கடிதங்களை அனுப்பி அல்ஸ்டர் மாகாணத்திலிருந்து அவர்களை வெளியேற்றினர்[47]. ஐக்கிய ஐரிஷ் மக்கள் அமைப்பின் தலைவர்களிலொருவரான வோல்ஃப் டோனெ (Wolfe Tone) என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க, பிரெஞ்சு பூர்ஷ்வா அரசாங்கத்தால் அந்நாட்டு இராணுவத் தளபதிகளிலொருவரான ஹோஷெ (General Hoghe) என்பவர் தலைமையில் சில படைப் பிரிவுகள் அனுப்பப்பட்டன. தனது படைகள் அயர்லாந்து மண்ணை மிதித்தவுடனேயே அந்த நாடு முழுவதிலும் ஒட்டு மொத்தமான எழுச்சி ஏற்படும் என்று ஹோஷெ கருதினார். ஆனால் அப்படைகளை ஏற்றிக் கொண்டு 1796 டிசம்பரில் பிரெஸ்ட் (Brest) நகரிலிருந்து புறப்பட்ட கப்பல்களில் ஒரு சில மட்டுமே பான்ட்ரி வளைகுடாவை (Bantry Bay) நெருங்கின. மற்றவை ஒன்று புயலில் சிக்கி அழிந்தன அல்லது ஆங்கிலேயப் போர்க் கப்பல்களால் மூழ்கடிக்கப்பட்டன. எஞ்சியவை பிரெஸ்ட் நகருக்குத் திரும்பிச் சென்று விட்டன. இருப்பினும். 1797 இல் தளபதிஹோஷெ மீண்டும் வருவார் என்ற



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரிகள்.

[illegible] 1798 இல் ஒரே ஒரு முறை பிரெஞ்சுத் துருப்புகள் அயர்லாந்திற்கு வந்தன. அவை மிக பலகீனமான துருப்புகள். பிரெஞ்சு பூர்ஷ்வா ஆட்சியாளர்களுக்கு அயர்லாந்தின் சுதந்திரத்தை விட ஆசியாவின் மத்தியக் கிழக்கு பகுதிகளில் காலனிகளைப் பிடிப்பதிலேயே அக்கறை கூடியிருந்ததால் அயர்லாந்திற்குவலுவான படைகளை அனுப்புவதில் உற்சாகம் இருக்கவில்லை.

இறுதியில் 1798 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் ஆங்கிலேய அதிகாரிகளால், ஆரஞ்சு அமைப்பு போன்ற காடையர் கூட்டங்களின் உதவியுடன் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. கிளர்ச்சியிலீடுபட்ட தலைவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர். ஐக்கிய ஐரிஷ் மக்கள் அமைப்பின் தலைவர்களிலொருவரான ஆர்தர் ஓ கோனென் மரண தண்டனையிலிருந்து தப்பினார். 1803 ஆம் ஆண்டு பொது மன்னிப்பு மூலம் விடுதலை செய்யப்பட்ட அவர் பிரான்சிற்கு நாடு கடத்தப்பட்டுத் தனது இறுதி நாள் வரை அந்த நாட்டிலேயே வாழ்ந்தார்[49].

அந்தக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதும் ஹேபியஸ் கார்பஸ் சட்டம் இடைநீக்கம் செய்யப்பட்டது. அயர்லாந்து முழுவதையும் முற்றுகையிடப்பட்ட நாடாகக் கருதும்படிச் செய்யும் பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்தக் கிளர்ச்சியை ஒடுக்குவதில் பிரிட்டிஷாரின் கூட்டணிகளாக இருந்தவர்கள் (1) புரொடெஸ்டெண்டு மக்களில் மிகப் பெரும்பாலானோர்; அவர்கள் ஆரஞ்சு அமைப்பில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தனர். (2) புதிதாக வளர்ந்து வந்த மத்தியதர வர்க்கம் அது; ரோமன் கத்தோலிக்க வர்த்தகர்களையும் கத்தோலிக்கத் திருச்சபையின் மேல் மட்ட மத குருமார்களையும் உள்ளடக்கியிருந்தது. பிரிட்டிஷாரின் கூட்டாளிகளான அவர்கள், பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதன் மூலமே தங்களது நலன்கள் பாதுகாக்கப்படும் என்று கருதினார்கள்[50]. எனவே குடிமக்கள் அனைவருக்கும் நீதியையும் சமத்துவத்தையும் வழங்கும். ஒரு சுதந்திரக் குடியரசை அவர்கள் எதிர்த்ததில் வியப்பில்லை.

(தொடரும்)

<u>குறிப்புகள்</u>


33. MEIQ,ப.130,553
34. அதே நூல், ப.92, 547
35. KMPC,ப.101
36. MEIQ, ப.150,560
37. அதே நூல், ப.139,558-559
38. அதே நூல், ப.140,559
39. அதே நூல், ப.175,569
40. அதே நூல், ப.175, 569
41. அதே நூல், ப.305,585
42. அதே நூல்,ப.132, 553
43. FSI
44. MEIQ,ப.136,557
45. அதே நூல், ப.100,549
46. அதே நூல், ப.97,548
47. அதே நூல், ப.274,579
48. அதே நூல், ப.216,136
49. அதே நூல், ப.248,580
50. FSI


## மரண தண்டனை ஒழிப்பு குடந்தையில் சிறப்புக் கூட்டம் 26 தமிழர் உயிர்காக்க ரூ.83 ஆயிரம் நிதியளிப்பு

*5.12.98 சனிக்கிழமை குடந்தையில் மரண தண்டனை ஒழிப்பு சிறப்புக் கூட்டமும், 26 தமிழர் உயிர்காக்க வழக்கு நிதி அளிக்கும் கூட்டமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் சா. பேகன் (த.தே.பொ.க. கிளைச் செயலாளர் மற்றும் நிதிக்குழு மாவட்ட அமைப்பாளர்) தலைமை தாங்கினார். திரு. பழ. நெடுமாறன்(தலைவர், த.தே.இ.) திரு. பால கோபால் (தலைவர், மனித உரிமை அரங்கு , ஐதராபாத்) தோழர் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க.) தோழர் விடுதலை இராசேந்திரன் (தலைமைக்குழு, பெரியார் திராவிடக் கழகம்) திரு.அய்யனாபுரம் சி. முருகேசன்(பொதுச் செயலாளர் த.தே.இ.) தோழர்கள் க. பழநிமாணிக்கம் (த.தே.பொ.க.) பி. ச. மாரிமுத்து (த.தே.பொ.க.) திரு.இராம. இளங்கோவன்(தமிழ் ஒளிப் பேரவை, பட்டுக்கோட்டை) உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். திரு. பால கோபாலின் ஆங்கில உரையை தோழர் கி. வெங்கட்ராமன் (த.தே.பொ.க.) தமிழில் மொழிபெயர்த்தார். தோழர் பெ. மணியரசன் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களின் சார்பில் வழக்கு நிதியாக 83,000/- ரூபாயை திரு.பழ. நெடுமாறனிடம் வழங்கினார். தோழர் அரங்க கார்வேந்தன் நன்றி கூறினார்.*



படிப்பகம்

www.padippakam.com

# பெப்சி - அண்மைக் கால வரலாறு

அக்டோபர் இதழ் தொடர்ச்சி

## பஞ்சாபில் வேளாண் ஆராய்ச்சி மையம்: அடிக்கல்லே இல்லாதபோது அடுக்குமாடி ஏது?

– செந்தழல்

பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா என்னுமிடத்தில் ICAR மற்றும் பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பெப்ஸி வேளாண் ஆய்வு மையம் ஒன்றை துவக்குவதை தனது கடப்பாடாக கூறியிருந்தது. ஆனால் அடிக்கல்கூட இன்றளவும் நாட்டப்படவில்லை என்பதே உண்மை.

### ஏற்றுமதிக்கான கடப்பாடுகளின் யதார்த்தம்

பெப்ஸி ஒப்புக்கொண்ட, உறுதியளித்த கடப்பாடுகளில் முக்கியமானவற்றில் ஒன்று தனது உற்பத்தி மதிப்பில் சரியாக பாதியளவிற்கு ஏற்றுமதி செய்வோம் என்பதாகும். பெப்ஸி ஏற்றுமதி செய்த பொருட்களை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுதே பழங்கள் மற்றும் காய்கறிகள் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு மிக மிகக் குறைவாக இருப்பதை காணலாம். தனது உறுதிமொழியை நிறைவேற்றியதாக கணக்குக் காண்பிப்பதற்காக பெப்ஸி பல்வேறுபட்ட இந்தியப் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தது. அதாவது பாசுமதி அரிசி, டார்ஜிலிங் தேயிலை, கண்ணாடிக் குப்பிகள், ஷேம்பெயின் மற்றும் தோல் பொருட்கள். ஆனால் இந்தப் பொருட்களெல்லாம் பன்னெடுங்காலமாக இந்தியாவிலிருந்து பல்வேறுபட்ட நிறுவனங்களால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அப்படியானால் பெப்ஸியின் சொந்த முயற்சியும் திறமையும் இப்பொருட்களை ஏற்றுமதி செய்வதில் எங்கிருந்து வந்தது?

கீழ்க்காணும் அட்டவணையை நோக்கும் பொழுது சூழலுக்கு மிகவும் கேடு விளைவிக்கக்கூடிய பெட் புட்டிகள் மொத்த ஏற்றுமதியில் 70 பங்கு இருக்கிறது. இந்த பெட் புட்டிகளை பெப்ஸியின் துணை நிறுவனமான FPL தான் உற்பத்தி செய்கிறது.

ஆனால் சூழலுக்கு எந்த அளவுக்கு கேடு நேருகிறது என்பதையும் பார்ப்போம்.

பெப்சியின் ஏற்றுமதி (ரூ கோடியில்)

| பொருட்கள் | 92-93 | 93-94 | 94-95 | 95-96 |
|---|---|---|---|---|
| பாசுமதி அரிசி | 7.9 | 10.4 | 7.4 | 18.0 |
| கூழ்மம் (தக்காளி மற்றும் மிளகாய்) | 3.2 | 3.5 | 4.1 | 3.0 |
| PSS | 8.6 | 9.1 | 21.6 | 40.0 |
| பெட்புட்டிகள் (Pet Bottles) | 0.4 | 0.4 | 36.2 | 133.5 |
| Guar | 12.8 | 14.3 | 2.8 | 3.43 |
| இதரவை | 3.3 | 2.0 | 1.2 | 3.0 |
| | 36.2 | 39.7 | 73.3 | 200.8 |

(ஆதாரம் : Global January 1997)

### பிளாஸ்டிக் வணிகம்: சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு

பெப்ஸி கோ பன்னாட்டு நிறுவனம் இந்திய நிறுவனமாகிய இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட் (Indian Organic Chemicals Ltd., I.O.C.L) உடன் இணைந்து பெட் (PET) புட்டிகள் தயாரிப்பதற்கான பிசின் தயாரிக்கும் ஆலை ஒன்றை 1994 ல் நிறுவியது. இந்த பெட் புட்டிகளில் தான் மென் பானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (1 லிட்டர் மென்பானங்கள் இருக்கும் புட்டிகள்). இந்த இரு நிறுவனங்களும் இணைந்து உருவாக்கிய நிறுவனத்தின் பெயர் Futura Polymers Limited (FPL) இந்த நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மணலியில் அமைந்துள்ளது. இது இந்தியாவில் உள்ள நூறு சதவீதம் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்று. தன்னுடைய உற்பத்தியைத் துவக்கிய இரண்டு ஆண்டுகளுக்குள் உலக அளவில் பெட்



படிப்பகம்

www.padippakam.com

புட்டிகளுக்கான ஆதாரம் இந்த நிறுவனம் ஒன்றுதான் என்று கூறுமளவிற்கு வளர்ந்துவிட்டது. இதனுடைய உற்பத்திப் பொருட்கள் சுமார் பதினான்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் பெட் புட்டிகளுக்கான பிசின் தவிர 'முன்னுருவம்' (Pre-forms) என்பதையும் தயாரிக்கிறது. பெட் புட்டிகளை உற்பத்தி செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் அது மென்மையாக இருக்கும்., அந்த நிலையில் அதிக அளவு அழுத்தத்திற்கு உட்படுத்தி அதை சிறிய உருவமாக மாற்றுவதற்கு பெயர்தான் முன்னுருவம் என்பது. பின்னால் அதிக அழுத்தத்தில் காற்றை அதனுள் செலுத்தினால் அது பெரிய பெட் புட்டிகளாக மாறும். இப்படி உருவத்தை சிறியதாக்குவது என்பது ஏற்றுமதி செய்யும் பொழுது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு போக்குவரத்து மூலம் எடுத்துச் செல்வதற்கும் எளிதாக இருக்கும், சிக்கனமாகவும் இருக்கும். FPL பெப்ஸி நிறுவனத்துடன் மிக நீண்ட காலத்திற்கு பெட் புட்டிகள் அளிப்பதற்கான ஒப்பந்தம் செய்துள்ளது.

சமீபத்தில் பெப்ஸி இந்த நிறுவனத்தில் மேலும் 25 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இதனால் இந்த நிறுவனத்தின் உற்பத்தி திறன் ஆண்டுக்கு 7000 டன்கள் என இருந்தது 28000 டன்களாக உயர்ந்துள்ளது. இணை நிறுவனமாக (Joint Venture) இருந்த போதிலும் பெப்ஸி கூடுதலாக 25 கோடி முதலீடு செய்ததன் விளைவாக அதனுடைய பங்கு மூலதனம் 52 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் உற்பத்திக்கான மூலப் பொருட்கள் என்ன என்று அறிந்தால் நாம் எந்த அளவு ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது புரியும். இதற்கான மூலப்பொருட்கள் ஏற்கெனவே உபயோகப்படுத்தி தூர எறிந்த பெட் புட்டிகள், பயனற்ற பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியன. இத்தகைய விலை மதிப்பு மிக்க மூலப் பொருட்கள் தமிழகம் போன்ற ஏழை நாடுகளில் கிடைக்காது என்பதால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கடல் வழி மூலம் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தப் பொருட்களை மீட்டுருவாக்கம் (Reprocess) செய்கிறார்கள். இந்த பிளாஸ்டிக் குப்பைகளை இறக்குமதி செய்வது என்பது FPL நிறுவனத்திற்கு ஒரு கல்லில் பல மாங்காய்கள். விழுவது போலாகும். ஆனால் தமிழகத்திற்கோ விழுகிற ஒவ்வொரு மாங்காயும் ஓர் அணுகுண்டைப் போல் நாசத்தை ஏற்படுத்த வல்லது. பிளாஸ்டிக் குப்பைகளை முதல் உலக நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்தவன் மூலம் அந்தந்த நாட்டின் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது. எனவே அவைகளிடமிருந்து இந்த நிறுவனம் கணிசமான நிதியையோ அல்லது சலுகைகளையோ பெற்றுக் கொள்ளும். முதல் மற்றும் இரண்டாம் உலக நாடுகளில் மக்கி, அழிந்து போகக் கூடிய குப்பைகளை ஓரிடத்திலும், எந்நாளும் மக்காமல், அப்படியே அழித்தாலும் நிலம், காற்று இரண்டையும் மாசு படுத்தக் கூடிய குப்பைகளை ஓரிடத்திலும் கொட்டுகிறார்கள். இந்த அழியாத குப்பைகளை அகற்றுவது என்பது அந்த நாடுகளுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. அந்த நாட்டு மக்கள் விழிப்புணர்வுடன் இருப்பதால் அங்கே இவற்றை அழிப்பதற்கும் மீட்டுருவாக்கம் செய்வதற்கும் பெரும் எதிர்ப்புக் கிளம்புகிறது. அந்த நாடுகள் இவற்றிற்கு எதிராக சட்டங்கள் இயற்றும் அளவுக்கு மக்கள் எதிர்பியக்கம் கடுமையாக இருக்கிறது. எனவே அந்தந்த நாடுகளில் இவற்றை அழிக்க முடிவதில்லை. அப்படிப் பட்ட குப்பைகளை இந்த நிறுவனம் அங்கிருந்து அப்புறப்படுத்துவது என்பது அந்த நாடுகளில் ஆரோக்கியத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் நன்மை அளிக்கக் கூடியது. எனவே இந்நிறுவனத்திற்கு ஆதாயத்துடன் கூடிய மூலப்பொருட்கள் கிடைக்கிறது. கரும்பு தின்னக் கொடுத்து அதற்கு கூலியும் கொடுத்தாற்போல் அமைகிறது. எந்த ஒரு நிறுவனத்திற்கும் மூலப் பொருட்களை உற்பத்தியின் மூலம் பொருட்களாக மாற்றி சந்தையில் விற்பனை செய்த பின்புதான் இலாபம் என்பது வரும். ஆனால் இந்நிறுவனத்திற்கு உற்பத்தியை துவங்கு முன்பே இரட்டிப்பு இலாபம் கிடைக்கிறது. பெப்ஸி நிறுவனம் தனது தலைமையகத்தை அமெரிக்காவிலே வைத்திருந்த போதும், இந்த பிளாஸ்டிக் குப்பைகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கான தொழில் நுட்பமும், மூலதனமும் இருந்தும் கூட கடுமையான சுற்றுச் சூழல் சட்டங்களால் பெட் புட்டிகளை அங்கே தயாரிப்பது இயலாத காரியம்.

இது குறித்து ஆய்வு செய்த பல்வேறு நிபுணர்களின் கருத்துப்படி 16 அவுன்ஸ் பெட் புட்டிகளை தயாரிப்பதில் வெளிவரும் நச்சு (வாயு, கழிவு) இதைப் போல் 100 மடங்கு அளவுள்ள கண்ணாடி குப்பிகளை தயாரிக்கும் பொழுது வெளியிடும் நச்சுக்கு சமம். இந்த ஆலையை அமைத்ததன் மூலம் பெப்ஸி நிறுவனம் முதல் மற்றும் இரண்டாம் உலக நாடுகளை சுகாதாரப் படுத்தியதோடு இதனை மீட்டுருவாக்கம் செய்யும் பொழுது ஏற்படும் நச்சு வெளியீடுகளிலிருந்தும் அவற்றை காப்பாற்றி



படிப்பகம்

www.padippakam.com

அதனை நம் தலையில் கட்டுகிறது. சியோலில் நடந்த உலக சுற்றுச்சூழல் மாநாட்டில் அப்போதைய நடுவணரசில் அமைச்சராக இருந்த திருமதி மேனகா காந்தி இந்தியாவின் சார்பில் பேசும் பொழுது "எங்கள் நாடுகளை (மூன்றாம் உலக நாடுகளை) உங்கள் நாடுகளின் குப்பைத் தொட்டியாக்காதீர்கள்" என்று முதல் மற்றும் இரண்டாம் உலக நாடுகளை நோக்கி கூறியது எவ்வளவு பொருட் செறிவுடையது என்று எண்ணத் தோன்றுகிறது.

அமெரிக்காவின் சுங்கத் துறையிலிருந்து வெளியிட்ட தகவல்கள் மற்றும் பசுமை அமைதி (Greenpeace) அமைப்பைச் சார்ந்த வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்ததன் மூலமும் 9,167,722 பவுண்ட்கள் அல்லது 4500 டன்கள் பிளாஸ்டிக் குப்பையை 23 கப்பல்களின் மூலம் 1993ம் வருடம் மட்டும் மணலியில் இருக்கும் FPL நிறுவனத்திற்கு பெப்ஸி இறக்குமதி செய்தது. FPL நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த இறக்குமதி நடைபெற்றது உண்மைதான் என ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்கள் பசுமை அமைதி ஆய்வாளர்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட குப்பையில் ஒரு பகுதியை மீட்டுருவாக்கம் செய்வது சாத்தியமில்லை என்று கூறினர். பசுமை அமைதி ஆய்வாளர்களின் மதிப்பீட்டின் படி 60 முதல் 70 சதவீதம் குப்பையைத்தான் மீட்டுருவாக்கம் செய்ய இயலும், மீதி இருப்பவைகள் பயன்படுத்த முடியாத அளவு சிதிலமடைந்து இருக்கின்றன. நிறுவனப் பிரதிநிதிகளும் பயன்படுத்த முடியாத குப்பைகளை வெளியேற்றி விடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் எங்கு எப்படி எந்த முறையில் வெளியேற்றுகிறார்கள் என்பதை கூறவில்லை. பசுமை அமைதி ஆய்வாளர்கள் அங்குள்ள தொழிலாளர்களின் பணிநிலைமைகள் மிகவும் மோசமாக இருப்பதாகவும் குறிப்பாக பெண் தொழிலாளர்களின் நிலைமை சொல்லத்தகாததாக இருப்பதாகவும் தமது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளனர். (ஆதாரம் Multinational monitor sep 94)

## ஒண்ட வந்த சாமியார் ஊர் சாமியாரை விரட்டியது

பெப்ஸி இன்று இந்திய நிறுவனங்களுடன் கூட்டு நிறுவனமாக இல்லை. தாராளமயப் பொருளாதாரத்தைத் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பெப்ஸி Foods ன் முழு அதிகாரத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தது. 1994 ல் பெப்ஸி வோல்ட்டாஸ் மற்றும் PAIC இரண்டிற்கும் அவர்களுடைய பங்குகளை கவர்ச்சிகரமான விலையில் வாங்கிக் கொள்வதாக ஆசை காட்டியது. வோல்ட்டாஸ் தனது பங்குகள் முழுவதையும் பெப்ஸிக்கு விற்று விட்டது. PAIC ஒரு பொதுத்துறை நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால் தனது பங்குகளை ஒரு சதவீதத்திற்கும் குறைவாக வைத்திருக்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டது. இணை நிறுவனமாக (Joint Venture) இருப்போம் என்பது உட்பட பலஉறுதி மொழிகளை நிறைவேற்றாமல் இருக்கும் பெப்ஸியைத் தண்டிப்பதற்கு பதில் அரசு அதற்குப் பல சலுகைகளை வாரி வழங்கியிருப்பது வரலாற்றின் நகைமுரண். உதாரணத்திற்கு மேலே சொல்லப்பட்ட பொதுத்துறையின் பங்குகளை குறைக்கச் சொல்லி கட்டாயப் படுத்துவது, தனது உற்பத்தி மதிப்பில் 50 சதவீதம் ஏற்றுமதி செய்யவேண்டும் என்கிற நிபந்தனையில் தளர்வு, மென்பானத் தயாரிப்பு ஒட்டு மொத்த தயாரிப்பில் 25 சதத்திற்கு மேல் போகலாம் என்கிற அனுமதி போன்றவை. சமீபத்தில் இந்திய அரசு பெப்ஸிகோ புதிய நிறுவனம் ஒன்றை அமைக்க அனுமதி அளித்திருக்கிறது. அதனுடைய பெயர் பெப்ஸி கோ இந்தியா ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் (Pepsi co India Holding Private Limited) இதன் பங்குகள் முழுவதும் பெப்ஸிகோவிற்கு சொந்தமானது. புதிய நிறுவனம் மென்பானத் தயாரிப்பிலும், புட்டிகள் உற்பத்தியிலும் மற்றும் ஏற்றுமதியிலும் ஈடுபட்டிருக்கிறது. பெப்ஸி கோவின் புதிய உடன்படிக்கைகள், முதலீடுகள் அனைத்தும் இப்புதிய நிறுவனத்தின் மூலமே நடக்கிறது. இப்புதிய நிறுவனம் இப்பொழுது 28 Bottling Units கொண்டு ஆண்டுக்கு விற்றுமுதல் ரூ.500 கோடிக்கும் மேல் வணிகம் செய்கிறது. இது பெப்ஸிகோவின் விற்றுமுதலாகிய ரூ.375/- கோடியை விட கூடுதல் (1996 கணக்கின்படி - ஆதாரம் -The Financial Express April 21, 1997)

1996 ம் ஆண்டு பெற்ற சிறிய அளவு இலாபத்தை தவிர இதுவரையில் இந்த நிறுவனங்கள் ஆண்டுக்கு 350 கோடி ரூபாய்க்கு மேல் நட்டமடைந்துள்ளதாகக் கணக்குக் காண்பிக்கிறது என்றாலும் சந்தையின் பெரும்பகுதியை கையகப்படுத்திக் கொள்வதிலும் தனது வணிகக் குறியீட்டு பெயரை பிரபலப்படுத்துவதிலும் பெரு வெற்றி பெற்றுள்ளது. இந்த நிறுவனம் நாட்டின் பல பகுதிகளில் உள்ள மென் பானத்தயாரிப்புகளை



படிப்பகம்

www.padippakam.com

கையகப் படுத்திக் கொண்டிருக்கிறது. மேற்கிந்தியப் பகுதிகளில் பிரபலமாக இருந்த Duties எனப்படும் மென்பான நிறுவனத்தையும் விலைக்கு வாங்கி விட்டது. சந்தையைக் கையகப்படுத்துவது என்பது மற்ற போட்டி நிறுவனங்களை விலைக்கு வாங்குவது அல்லது இணைப்பது, இரண்டிற்கும் ஒத்துவராமல் இருப்பவர்களை அழிப்பது என்பது பன்னாட்டு நிறுவனங்களின் நடைமுறை. மிக வேகமான, வலிமையான, வணிகம் மூலமும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் (இதைப் பற்றியே தனியாக ஒரு கட்டுரை எழுதுமளவிற்கு பண்பாட்டு சீரழிவுகளை கொண்டிருக்கிறது) மூலமும் தனது நிலையை பெப்ஸி நிறுவனம் வலுப்படுத்தி தக்க வைத்துக் கொண்டது.

பல ஆராய்ச்சி நிறுவனங்கள் எடுத்த புள்ளிவிபர மதிப்பீட்டின்படி பெப்ஸி இந்திய மென்பானச் சந்தையில் சுமார் 40 சதவீதத்தைத் தன் வசம் வைத்திருக்கிறது. 1995ல் மட்டுமே பெப்ஸியின் விற்பனை 50 சதவீதத்தையும் தாண்டியது. ஆனால் அவ்வருடம் ஒட்டு மொத்த மென்பானச் சந்தை விரிவடைந்ததென்னவோ 20 சதவீதம் தான். இதன் பொருள் என்னவென்றால் பெப்ஸி தனக்கான புதிய சந்தையைத் தேடுவதை விட ஏற்கெனவே இந்திய தயாரிப்புகள் தக்க வைத்து இருந்த சந்தையை தன் வசப்படுத்துகிறது என்பதாகும். பெப்ஸியின் போக்கில் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற மாறுதல் கோலா அல்லாத மென்பானங்களை விட கோலா வகையை முதன்மைப்படுத்துவதாகும். "நாங்கள் பெப்ஸி என்னும் வணிக குறியீட்டு பெயரை ஒரு முகமாக குவிமையப்படுத்துகிறோம்" என்று பெப்ஸியின் வர்த்தக துணைத் தலைவர் ரிஷி என்பவர் ஒப்புக் கொண்டுள்ளார் (ஆதாரம்Business India January 15-28, 1996 ) உலக அளவில் பெப்ஸி கோ பன்னாட்டு நிறுவனம் இந்தியா மீது தன் கவனத்தை மேலும் மேலும் குவிமையப் படுத்துகிறது. உலக அளவில் இந்தியாவில் தான் மென்பானங்களை பயன்படுத்துவது தனி நபர் சதவீதத்தில் மிகவும் குறைவாக உள்ளது. இந்தியாவில் ஒரு நபர் மூன்று அவுன்சு மென்பானம் மட்டுமே பயன்படுத்துகிறார். அமெரிக்காவில் இது 300 அவுன்சுகளாகவும் ஐரோப்பாவில் இது 200 அவுன்சுகளுக்கு மேலாகவும் இருக்கிறது. எனவே இங்கு மென்பான உபயோகத்தை பெருக்குவதற்கான வாய்ப்பு ஏராளமாக இருப்பதாக பெப்ஸி கருதுகிறது. ஆனால் ஒரு முக்கியமான பொருளை அது கருத்தில் கொள்ளவில்லை. சராசரி இந்தியனின் வருமானத்திற்கும் சராசரி அமெரிக்க மற்றும் ஐரோப்பியனின் வருமானத்திற்குமான வேறுபாடு மிக மிகக் கூடுதலாக உள்ளது. எனவே வாங்கும் திறனைப் பொறுத்த அளவில் அமெரிக்க மற்றும் ஐரோப்பியனை விட இந்தியன் பன்மடங்கு குறைவாக இருக்கிறான். ஒரு புட்டி பெப்ஸி வாங்குவதற்கு இந்தியன் சராசரி 1.5 மணி நேரம் உழைப்பை செலவிட வேண்டியுள்ளது. ஆனால் அமெரிக்கனோ 5 நிமிடத்திற்கும் குறைவான உழைப்பை செலுத்தினாலே போதும் என்கிற நிலை உள்ளது. இந்த பத்து ஆண்டுகளில் பெப்ஸியின் நோக்கம் மென் பானங்களை இந்திய சந்தையில் விற்பனை செய்வது மட்டுமே என்பதும் தனது உறுதி மொழிகளைக் காப்பாற்றுவதில் கிஞ்சித்தும் அக்கறையில்லை என்பதும் தெளிவாகிறது. கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்ற வைக்க வேண்டிய அரசும் அரசு இயந்திரமும் துளியும் கவலைப்படாமல் மேலும் மேலும் சலுகைகளை வாரி வழங்குகிறது. எனவே மக்கள்தான் பெப்ஸி கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்றச் செய்ய வேண்டும். பெரும்பான்மை மக்கள் எழுத்தறிவு அற்ற இந்த நாட்டிலே மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி போராட்டக் களத்திலே அணி திரள வைப்பது. முற்போக்கு சிந்தனையுள்ளவர்களின் முதற் கடமையாகிறது. ஏற்கெனவே கர்நாடக விவசாயிகள் கெண்டகியையும், கார்கில் நிறுவனத்தையும் அப்புறப்படுத்தி முன்னுதாரணங்களாக இருக்கின்றனர்.

நவம்பர் 1994 ல் PIRG என்னும் அமைப்பின் தலைவர் கிரிஷ்டோபர் சின்கௌர், பெப்ஸியின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் (President and CEO) க்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் பிளாஸ்டிக் குப்பைகளை இறக்குமதி செய்வது, மென்பானத்திற்கு PET புட்டிகளை பயன்படுத்துவது ஆகியவற்றை நிறுத்தக் கோரியும், பஞ்சாப் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக்கோரியும், தன்னுடைய நிதியறிக்கை மற்றும் ஆவணங்களை பொதுமக்களுக்கு கிடைக்குமாறு வைக்கக் கோரியும், அதனுடைய உறுதிமொழிகளை நிறைவேற்றக் கோரியும் எழுதியுள்ளார்.

தமிழக மக்களாகிய நாம் வைக்க வேண்டிய முக்கிய கோரிக்கைகள்

1. *பெப்ஸியின் துணை நிறுவனமாகிய* **Futura Polymers Ltd.,** *என்னும் நிறுவனத்தை உடனடியாக மூட வேண்டும். பெப்ஸி மூட*



படிப்பகம்

www.padippakam.com

மறுத்தால் தமிழக அரசு மாசு கட்டுப்பாட்டை வைத்து அதன் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்.

2. இந்த ஆலையால் இதுகாறும் பாதிப்புக்குள்ளான சுற்றுப்புறத்தில் வாழும் மக்களுக்கும் அங்கு பணியில் உள்ள தொழிலாளர்களுக்கும் (நிரந்தர, பகுதிநேர, அன்றாட மற்றும் பதிலி உட்பட )நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

3. இந்த ஆலையால் நிலம் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றதால் அதை சரி செய்வதற்கான ஆய்வுச் செலவுகள் உட்பட அனைத்தும் பெப்ஸி நிறுவனம் ஏற்க வேண்டும்.

4. பஞ்சாப் மாநில விவசாயிகளுக்கு நட்ட ஈடு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

5. மென்பானங்களை பெட் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்வதை தடுப்பதற்கான சட்டம் உடனடியாக இயற்றப்பட்டு உண்மையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

6. பெப்ஸி கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்றவேண்டும்.

தமிழக மக்களில் முன்னணியில் உள்ள முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் இதை நோக்கிய தங்கள் போராட்டத்தைத் துவங்க வேண்டும். மற்றவர்கள் குறைந்தபட்சம் பெப்ஸி நிறுவனத்தின் மென்பானங்களைக் குடிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் ❖

குறிப்பு: இது PIRG Update என்னும் இதழின் June 97ல் வந்த கட்டுரையின் தழுவல்.

## த.தே.பொ.க. வட மாவட்ட செயலாளர் இராசேந்திர சோழன், பேரா. கல்யாணி கைதைக் கண்டித்து சுவரொட்டி

நெய்வேலி த.தே.பொ.க. சார்பிலும் தமிழ் தமிழர் இயக்கம் மற்றும், தமிழகப் புரட்சி இயக்கம் சார்பில் கைதைக் கண்டித்தும் பொய் வழக்கை திரும்பப் பெறக் கோரியும் சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டன.

## அச்சங்கள் இனி எதற்கு?

-கு. இராம கிருட்டிணன்

அர்ச்சனை செய்வதற்கு
அன்னைத் தமிழிருக்க
ஆரிய மொழியெதற்கு?
பிரச்சினை என்று வந்தால்
வெறும் பேச்சு வேண்டாம்
வீரர்கள் திரள வேண்டும்.

நாவில் நடமாடி
நாட்டில் உலவும் மொழி தமிழ்
கோவில் குருக்களுடன்
குறுகிவிட்டது வடமொழி

ஆத்திகத் தமிழனுக்கு
நாத்திகத் தமிழன் துணையுமுண்டு
அழகு தமிழ் அர்ச்சனைக்கு
அச்சங்கள் இனி எதற்கு?

## முதுபெரும் எழுத்தாளர் சி.சு.செல்லப்பா வுக்கு இரங்கல்

முதுபெரும் எழுத்தாளரும், இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழில் புதுக்கவிதை மரபுக்கு தனது 'எழுத்து' இதழ் மூலம் ஓர் உறுதியான இடத்தை உருவாக்கியவரும் ஆன சி.சு. செல்லப்பா அவர்கள் தனது 86 வது அகவையில் சென்னையில் காலமானர். அண்மையில் அமெரிக்க தமிழ் அமைப்பான 'விளக்கு' அளித்த பரிசுத் தொகையை மறுத்ததும், தான் வெளியிட்ட நூல்களை தானே தோளில் சுமந்து தமிழகம் முழுதும் விற்பனை செய்ததும் சி.சு.செ. யின் தனிச்சிறப்பு. சிறுகதை, புதினம், கவிதை, மொழிபெயர்ப்பு, புத்தக வெளியீடு, பத்திரிகை ஆசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட இவரது படைப்புக்களில் வாடிவாசல் ஜீவனாம்சம் மற்றும் 1700 பக்கங்களுக்கு மேற்பட்ட சுதந்திரதாகம் எனும் விடுதலைப் போர் பற்றிய வரலாற்றுப் புதினம் குறிப்பிடத்தக்கவை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்!
# "தமிழ் எழுத்துக்களின் (சரியான) வரிவடிவங்கள்"

- கவிஞர் தஞ்சைவாணன் (துரை சீனிவாசன்)

1. எழுத்துச் சீர்திருத்தம் என்பது மொழிக்கேற்ற மரபு வழிச் சரியான வரிவடிவச் சீரமைப்பேயாம். இவ்வாறு சரியாக்கப்பட வேண்டிய எழுத்துக்கள் தமிழ் எழுத்தியலில் இருப்பதாலேயே சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆன்றோரும், அரசும், மக்களும் எழுத்துச் சீர்திருத்தம் கோரி குரல் கொடுத்து வருகின்றனர்.

2. பாவேந்தர் பாரதிதாசனாரும், 'தமிழ் எங்கள் உயிர் என்று சொல்லிச் சொல்லி தலைமுறைகள் கழித்தோம்; பிழை களைந்தோமில்லை' என்று மனம் நொந்து நமது எழுத்தியலைச் சுட்டிக் கூறியுள்ளமை யாவரும் அறிந்ததே. எனவே, எழுத்தியலில் முறைப்படுத்தப்பட வேண்டியவை உண்டு என்பது தேற்றம்.

3. எனவே இவற்றைச் சீரமைக்கச் சில கோட்பாடுகள் கொண்டு செயல்படுதல் சிறப்பாம். அவை கீழ்க்குறித்தவாறு இருத்தல் இன்றியமையாதது:-

அ) ஒரே உயிரைக் கொண்ட உயிர்மெய் எழுத்துக்களுக்கு ஒரே மாதிரியான குறியீடுகள்.

ஆ) குறியீடுகளை மெய்யெழுத்துக்களுடன் இணைத்து எழுதாமை

இ) ஒரு உயிர்மெய் எழுத்துக்கு இரட்டை குறியீடுகள் (கொ,கோ,கௌ) கொள்ளாமை.

ஈ) எல்லாக் குறியீடுகளும் மெய்யெழுத்துக்குப் பின்னரே வருதல்.

உ) புதுக்குறியீடுகள் தமிழின் வரிவடிவத்துக்கு ஒத்தவையாக இருத்தல், என்றவாறு.

4. இவ்வாறான எழுத்துச் சீரமைப்பு எனும் சரியான வரிவடிவ நெறிமுறை யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று. இ,ஈ,உ,ஊ- உயிர்கள் கொண்ட உயிர்மெய் எழுத்துருவங்கள் நம்மை உறுத்திக் கொண்டிருப்பின், இவை ஒவ்வொன்றும் பதினெட்டு மெய்களின் ஏறி, வெவ்வேறான உயிர்மெய் உருவங்கொள்கின்றன. இவை கற்பதற்குக் கடினமானவை; காட்டுவதற்கும் முறையற்றவை. இவ்வுயிர்களுக்கு தொல்காப்பிய முறை தழுவி குறியீடுகள் நான்கு கொடுத்துவிட்டால் மரபு நெறி காக்கப்படுவதோடு எழுத்தெண்ணிக்கையிலும் எழுபத்திரண்டு குறையும்.

5. இவ்வகையில் இ,ஈ -உயிர்களின் குறியீடுகளாக 'ட' எழுத்தையே வலப்பால் தலைகவிழ்த்து வைத்து என்று குறிலுக்கும், டகரத்தையே வலம் கூட்டி நிறுத்தி வைத்து க ſ என்று நெடிலுக்கும், உருத்திரிபு செய்து கொள்வதால் கோரிய குறியீடுகளும் கிடைக்கும் வரிவடிவங்களும் கூடா. இவ்வாறே, உ,ஊ- உயிர்களின் குறியீடுகளாக 'உ' எழுத்தையே வலம் சுழியாகத் தலைகீழ் வைத்து க என்று குறிலுக்கும், உகரத்தையே வலம் கூட்டிக் கவிழ்த்து க என்ற நெடிலுக்கும் உருத்திரிபு செய்து கொள்வதால் கோரிய குறியீடுகளாக்கலாம். வரிவடிவங்களும் கூடா. மேற்குறித்த நான்குடன், தொல்காப்பியன் குறியீடு கொடுத்துள்ள ஏழு உயிர்களும் சேர்ந்து பதினோரு உயிர்கள் குறியீடு கொண்டவை ஆகின்றன.

6. இந்நெறிமுறைக்குப் புறம்பாக அகர உயிர்மெய்யாக்கம் உள்ளது. இப்புறம்போக்கு நிலையை இனியும் நீடிக்க விடாமல் இப்போதே அகரத்திற்கும் ஓர் குறியீடு கொண்டிடல் வேண்டும். இது எழுத்துச் சீர்மைக்கும், இலக்கணத்திற்கும் உடன்பட்ட நெறியாகும். ஆகவே, அகர உயிரின் குறியீடாக 'ப' எழுத்தையே இடப்பால் ⊃ சாய்த்து வைத்து க⊃ என்று அகர உயிர்மெய்யாக்கலாம். இதனால் உயிர்கள் பன்னிரண்டும் குறியீடு கொண்டு, உயிர்மெய் ஆக்கம் ஒரு சீராய் அமையும். அத்துடன் தட்டச்சுக்கும் கையெழுத்துக்கும், கணிணி அச்சுப்பொறிகட்கும் இதுவரை இடையூறாக இருந்த புள்ளிமெய் எழுத்துக்களும் நீக்கம் பெறும் என்பதால், அகரத்திற்குக் குறியீடு கொண்டமை எழுத்துக் குறைப்புக்கும் தமிழ் வளத்திற்கும் பயன் தருவதாகும்.

7) இந்நிலையில் இதுவரை அகர



படிப்பகம்

www.padippakam.com

உயிர்மெய்யாய் இருந்த புள்ளி கெட்ட மெய் உருவங்களையே மெய்யெழுத்துக்களாக (புள்ளியின்றி) ஏற்றுக் கொள்ளல் இன்றையக் கணிணி முறைக்கும் தமிழ் நெறிக்கும் நன்மை பயப்பதாகும். மேற்குறித்த சீர்திருத்தங்கள் மிகவும் எளிதானவை, நெறி தழுவி நிற்பவை; உடனடியாக அமலுக்குக் கொண்டு வரக் கூடியவை அத்துடன், அனைத்து நவீன அச்சு சாதனங்களுக்கும் ஏற்றவை. அறிவியல் துறையில் தமிழ் மொழி மேலும் முன்னேற இக்சீர்திருத்தங்கள் ஆக்கம் தருவனவாகும்.

8. இவற்றுடன் மேலே குறித்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய மூன்றாம் கோட்பாடான (ஓர் உயிர்மெய் எழுத்துக்கு இரட்டைக் குறியீடுகள் -கொ,கோ, கௌ கொள்ளாமை) அடிப்படையில் உயிர்மெய்களைச் சீரமைக்கக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வகையில் ஒ(கொ), ஓ(கோ), ஔ (கௌ) உயிர்மெய் உருவகங்களைச் சீராக்க இம்மூன்று உயிர்களுக்கும் முறையாக் குறியீடு கொண்டாக வேண்டும். இதற்கு 'ய' எழுத்தையே கவிழ்த்து வைத்து கஎ என்று ஒகரத்திற்கும், அதையே வலப்புறம் சாய்த்து வைத்து க ᘓ ஓகாரத்திற்கும் குறிகளாகக் கொள்ளலாம். அத்துடன் 'ஔ' எழுத்தின் குறியீடாக 'வ' எழுத்தை வலம்சுழி காட்டி மேல் நோக்கி வைத்து கஶ என்று உயிர்மெய் ஆக்கல் தரும். இவ்வாறு உள்ள எழுத்துக்களையே உருத்திரிபு செய்து கொள்ளப்பட்ட குறியீடுகளால் வரிவடிவத் தேவை மிகாது தவிர்க்கப்படுவதோடு, இரு குறிகள் கொண்ட மூன்று உயிர்மெய்களும் தனித்தனி ஒரே குறியீடு கொண்டு செயல்படுவனவாகும். இவ்வாறே 'ஆ ஐ'- உயிர்களுக்கும் வேற்றுருவக் குறியீடுகள் நீக்கிட உள்ள 'ப' எழுத்தையே உருத்திரிபு செய்து வைத்து ஆகாரத்திற்கும், னகரத்தை மேல்நோக்கிக் கிடத்தி ௱ ஐகாரத்திற்கும் க௱ குறியீடுகளாக்கலாம். வேற்றுருவம் தேவைப்படாது.

9. ஆக எழுத்துக் குறைப்புக்கென்று எவ்விதத்தனி முயற்சியுமின்றி இயல்பாக வந்த குறைப்புகள்(72 + 18 + 4 =94). எனவே, இவ்வரைமுறையை விரைந்து செயல்படுத்த அரசும் மக்களும்,ஆன்றோரும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இல்லையேல், தமிழர் நாம் எங்கும், எதிலும் பின்னடைந்து பேதலிக்க நேரிடும் என்பது அறிஞர்கள் கணிப்பு.

10. தமிழ் எழுத்துக்கள்
குறிகளான எழுத்துக்கள்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| குறிகள் | ப | ட | உ | எ | ன | ய | வ |
| உயிர்கள்12 | அ,ஆ | இ,ஈ | உ, ஊ | எ ஏ | ஐ | ஒ,ஓ | அவ |
| உயிர் குறிகள்12 | ɔ ᑎ | ⌊ ¬ | ᶅ ᘓ | ᘓ ᘓ ᘓ | ௱ | ᘓ ᘓ | ௵ |

ஆய்த எழுத்து ஃ

புள்ளியிலா மெய் 18:-
க,ஙச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர,லவ,ழ,ள,ற,ன.
(இக்-இன்)

அனைத்து (12) உயிர்களுக்குமான ககர உயிர்மெய்கள்:-

க ɔ க ᑎ க ¬ க ┌ க ᶅ க ᘓ க ᘓ க ᘓ க௱ க ᘓ

க ᘓ க ௵

மெய்யெனப் படுவது புள்ளியில் எழுத்தே
உயிர்க்குறி வலம்வரக் கொண்டதே உயிர்மெய்
உயிர்க்குறி வலம்வரா உயிர்மெய் இலையே
உயிர்குறி வலம் வரா மெய்யெலாம் ஒற்றே
(த.எ.(ச)வ-வ- நூல் சூ.14)

11. எனவே, மேற்குறித்த தமிழ் எழுத்துக்களை அரசு ஏற்று, விரைந்து செயல்படுத்தி நாட்டுக்கும், நல்ல தமிழுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியது. இதனால் வெறும் முப்பதே எழுத்துக்கள் தமிழுக்கு யாதுமாகி, எல்லாமாகித் தமிழர்களை வாழ வைக்கும் என்பன உறுதி. முப்பதே எழுத்துக்கள் தமிழ் ஒலிகள் 247 முழுவதையும் முன் நின்று நடத்த வல்லன என்பது காண்க!

<u>த. எ (ச). வ. வ. - நூல் சூத்திரம் 15</u>

எழுத்துருவங்கள் உயிரோடு மெய்யுமாய்
இருபத் தொன்பதும் ஆய்தம் ஒன்றும்
உயிர்குறியீடுகள் இருந்தும் அவற்றை
இருக்கும் எழுத்துக்கள் இணங்கி ஏற்றதால்
வேற்றுருவங்கள் விலகிப் போயின
மூல எழுத்துரு முப்பது மட்டுமே
இசைந்த தமிழொலி ஏழுடன் நாற்பதும்
இருநூறும் கொண்டு இயங்கப் பெறுமே!

குறிப்பு: இக்கட்டுரையின் விரிவும், விளக்கமும் 'தமிழ் எழுத்துக்களின் (சரியான) வரிவடிவங்கள்' எனும் எனது நூலில் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# 'கவியரசு' முடியரசன்

-பாமைந்தன்

"சமயம் கட்சி சாதியோ டரசியல்
அமையும் தொழிலால் ஆர்த்தெழு பகைமை
இமயம் போலது எதிருள தாயினும்
கருதாது அதனைக் கடிதினில் ஒதுக்கி
ஒரு தாய் மக்கள் உணர்வே ஓங்கி
வருகை புரிந்தீர் வாழிய பெரியீர்!"

என்று தம் **'பூங்கொடி'**க் காப்பியத் **தலைவி** கூற்றாக மலையுறையடிகளை வரவேற்றெழுதிய வரிகள் கவியரசு முடியரசனார்க்கும் மிகப் பொருந்தும், இந்நூற்றாண்டின் 'தமிழ்த் தேசியக் காப்பியம்' எனத் திறனாய்வாளர்கள் ஏற்றுக் கொண்ட 'பூங்கொடி'யைப் படைத்த கவிஞர் முடியரசன் சொல்லும் செயலும் ஒன்றி வாழ்த்தவர்.

சுப்பராயலு-சீத்தாலக்குமி தம்பதியர்க்கு மகனாக 7.10.1920 இல் பிறந்த இவரது இயற்பெயர் துரைராஜ் என்பதாகும். மேலைச்சிவபுரி, செந்தமிழ்க் கல்லூரியில் பயின்று, தமிழ்ப்பற்றினராய்த் தம் பெயரை 'முடியரசன்' எனக் கொண்டார், (மாணவப் பருவத்திலேயே திராவிடர் கழக ஈடுபாட்டுடன் செயலாற்றினார்).

1946 முதல் இரண்டாண்டுகள் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் காரைக்குடி மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் முப்பதாண்டுகளுக்கு மேல் தமிழாசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

1949 இல் கலைச் செல்வி என்பாரைச் சாதி மறுப்பு மணம் புரிந்து கொண்ட இவருக்கு ஆறு குழந்தைகள். தம் குழந்தைகள் யாவருக்கும் 'சாதி மறுப்பு மணமே' செய்வித்தார் முடியரசன்.

1950 இல் பாவேந்தர் பாரதிதாசனால் பாராட்டப்பெற்ற முடியரசன், பாவேந்தர் வழிக் கவிஞராவார். **'முடியரசன் கவிதைகள்' 'பூங்கொடி', 'வீரகாவியம்', 'கவியரங்கில் முடியரசன்'** 'பாடும் **குயில்'** முதலியன இவர் படைத்த நூல்கள். தமிழ், இயற்கை, சமூகம் என்பன இவர் கவிதை உள்ளடக்கம்.

1966 இல் 'முடியரசன் கவிதைகள்' நூலுக்காகவும், 1973 இல் 'வீரகாவியம்' நூலுக்காகவும் தமிழக அரசின் பரிசினைப் பெற்ற முடியரசனுக்கு, தவத்திரு குன்றக்குடி அடிகளார், பறம்புமலைப் பாரி விழா வில் **'கவியரசு'** எனும் பட்டம் வழங்கினார்.



தமிழகப் புலவர் குழு 1983 இல் **'தமிழ்ச் சான்றோர்'** விருது வழங்கிச் சிறப்பித்தது.

கவியரசு முடியரசனார் 03.12.98 அன்று மறைந்தார். எவ்விதப் பழம் சடங்குகளும் இன்றி சடலம் எரியூட்டப்பட்டது.

'தமிழ்த் தேசியக் குடிமகன்' எனத் தக்க நேரிய முழுமை வாழ்வு வாழ்ந்த கவியரசு முடியரசனார்க்குத் தமிழக அரசு செய்ய வேண்டியவற்றைத் தமிழண்ணல் தெளிவுற முன் மொழிந்திருக்கிறார். 'இவர்தம் நூல்கள் அனைத்தையும் ஓரிரு தொகுதிகளாக வெளியிடத்தமிழக அரசு உதவலாம். ஒரு பழைய வீட்டில் முடங்கிக் கிடந்தார் இவர். இவருக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும் என்பதனிலும், நல்ல காற்றோட்டமுள்ள சிறு மனை கட்டி இவர் மக்கள் வாழத் தமிழகம் வழி செய்யலாம்' (தினமணி 5.12.98) தமிழ்ச் சமூகத்தின் சார்பில் இதனை வழிமொழிவோம் ❖



படிப்பகம்

www.padippakam.com

# இளையபெருமாள் நடத்திய மீசைப் போராட்டம்

-பேரா. இரா. திராவிடராணி

எல்.இ.பி. என்று அன்புடன் அழைக்கப்படும் இலட்சுமண. இளையபெருமாள் அவர்களுக்கு இவ்வாண்டு பவள விழா கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு இவ்வாண்டிற்குரிய அண்ணல் அம்பேத்கர் விருது வழங்கி அவரைச் சிறப்பித்திருக்கிறது.

ஜாரின் கொடுமை தாங்காத உருசியா லெனினை ஈன்றே தீரும் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதுபோல், சாதி ஆதிக்க வன் கொடுமை இளைய பெருமாளை ஈன்றது.

1924 ஜூன் 26 ஆம் நாள் இலட்சுமணன் - மீனாட்சியம்மாள் தம்பதியார்க்கு காட்டு மன்னார்கோயில் அருகே உள்ள உடையார் குடி கோலியர் தெருவில் பிறந்த இளைய பெருமாளின் பொது வாழ்க்கை 1947ல் தொடங்குகிறது. 1944 -ல் பரங்கிப் பேட்டை கழக உயர் நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு (S.S.L.C)வெற்றி பெற்ற பின் அண்ணல் அம்பேத்கர் செயல்பாடுகள் மீது அவரது கவனம் திரும்புகிறது. ஆதிதிராவிடர் வகுப்பில் பிறந்த இளைய பெருமாளுக்கு தீண்டாமைக் கொடுமைக்கெதிராக சினம் பொங்கியது. சீறி எழுந்தார்.



காட்டு மன்னார் குடியில் 30.10.1946 -ல் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர் நலச் சீர்திருத்தச் சங்கத்திற்கு 17.1.1947-ல் எல்.இ.பி. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947 ஜனவரியில், காட்டுமன்னைப் பகுதியில் கூலி உயர்வு கோரி விவசாயத் தொழிலாளிகள் போராடினர். அப்போது ம.உடையூர் பண்ணையார் ஏகாம்பரம் ஆதி திராவிடர் ஒருவரைக் கட்டிவைத்து அடித்ததுடன் எல்லா விவசாயத் தொழிலாளிகளின் வீட்டு வாசலிலும் கருவேல முள்ளை வைத்து அடைத்துவிட்டார். அங்கே புயலெனப் பாய்ந்து சென்றார் எல்.இ.பி. நியாயம் கேட்டார். மாவட்ட ஆட்சியர் தலையீட்டின் பேரில் கூலி ஒப்பந்தம் ஏற்பட்டது. பண்ணையார் ஏகாம்பரம் தன் தவறைத் திருத்திக் கொண்டார். இவ்வெற்றிக்குப்பின் எல்.இ.பி. புகழ் சுற்று வட்டார மெங்கும் பற்றிப் படர்ந்தது.

கிராமங்கள் தோறும் எல்.இ.பி. தலைமையிலான சங்கக் கிளைகள் உருவாயின. சாதி ஆதிக்கத்திற்கு சவாலாக அமைந்தன அச்சங்கங்கள்.

மிராசுதாரர்கள் சங்கம் வைத்து தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக் கெதிரான திட்டங்களைத் தீட்டினார்.

1947 டிசம்பரில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த இராணுவ வீரர் மீசை வைத்திருந்தார் என்பதற்காக அவ்வூர் வன்னியர்கள் அவரைக் கட்டி வைத்து அடித்து அவரது மீசையை நெருப்பு வைத்துக் கொளுத்தினார்கள்.

இச்செய்தி கிடைத்ததும் அங்கு விரைந்த எல்.இ.பி. புளியங்குடியில் வாழ்ந்த ஆதிதிராவிடர்கள் சுமார் 5000 பேரை தங்கள் குடிசைகளைப் பிரித்துக் கொண்டு இடம் பெயர்ந்து பிள்ளையார் தாங்கலில் குடியேறச் செய்தார்.

புளியங்குடி வன்னியர்கள் தங்கள் தவறை உணர்ந்து, சமரசம் பேசி, ஆதிதிராவிட மக்கள் மீண்டும் தங்கள் ஊரில் குடியேற உடன்பாடு செய்தனர். பிரிக்கப்பட்ட குடிசைகளுக்கு இழப்புத் தொகையும் வழங்கினர். அதன் பின்னர் அவ்வூரில் ஆதிதிராவிடர்கள் மீசை வைத்துக் கொள்ளவும், செருப்பு அணியவும், சவங்களை வீதி வழியே



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளிடக் கரைக்கு எடுத்துச் செல்லவும் வழி பிறந்தது.

தீண்டாமைக் கெதிராக சாதி ஒடுக்கு முறைக் கெதிராக இவ்வாறு எல்.இ.பி. கண்ட களங்கள் பல.

1. தப்புக் கொட்டுவதை நிறுத்துவது 2. சைக்கிளில் செல்வது 3. செருப்புப் போட்டுக் கொண்டு போவது 4. துண்டு போடுவது 5. தலைப் பாகை கட்டுவது 6. வண்டியின் மேல் உட்கார்ந்து ஓட்டுவது 7. கன்னி ஆடுவதை நிறுத்துவது. 8. கன்னி ஆடுகின்ற பெண்களை ஆண்கள் சாட்டை கொண்டு அடித்து சாமி ஆடுவதை நிறுத்துதல் 10. பொங்கல் தீபாவளிக்கு மேட்டுக்குடியினர் தெருக்களுக்கு உணவு மற்றும் சன்மானம் பெறச் செல்வதை நிறுத்துதல் என்பன போன்ற சீர்திருத்தத் தீர்மானங்களை எடுத்து செயல்படுத்தியது எல்.இ.பி. தலைமையில் அமைந்த தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்.

தவத்திரு சுவாமி சகசானந்தா அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த எல்.இ.பி., சுவாமியின் மறைவுக்குப் பிறகு அவர் உருவாக்கிய நந்தனார் கல்விக் கழகத்தின் பொறுப்பினை ஏற்றுத் திறம்பட அதை வளர்த்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக 1979 -ல் செயல்பட்டார். பின்னர் அக்கட்சியிலிருந்து விலகினார். 1952 முதல் 1967 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1980-ல் சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார். அண்ணா மலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினர் பதவி 1960 முதல் வகிக்கும் வாய்ப்புப் பெற்றார்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் 1965 முதல் தீண்டாமை ஒழிப்புக்குழுத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றியதும் இளைய பெருமாள் குழுத் தலைவராக இருந்து இந்தியா முழுதும் நேரடி ஆய்வு செய்து, தீண்டாமை, சாதி ஆதிக்கம், ஏழ்மை இவற்றை ஒழிக்கப் பரிந்துரைகள் வழங்கியதும் குறிப்பிடத்தக்கவை.

இளைய பெருமாள் அவர்களின் பவள விழாவின் போதாவது இந்திய அரசு அவரது குழு அளித்த பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் ○

## தமிழகத்தின் உட்பகுதிப் பள்ளிகளுக்கும் தெலுங்கு ஆசிரியர்களா? கண்டனத் தீர்மானம்

நங்கவள்ளி தமிழ்ச் சங்க ஆலோசனைக் கூட்டம் சிந்தனையாளர் மா. அர்த்தனாரி அவர்களது நட்புறவுப் பண்ணையில் 3.12.98 அன்று நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தமிழ்நாட்டரசு நடத்தும் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் மொழிச் சிறுபான்மையார்களுக்கான ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் தெலுங்கு மூலம் ஆசிரியர் பயிற்சி அளிக்க தமிழ் நாட்டின் உள்பகுதிகளான சேலம் மாவட்டத்து கெங்கவள்ளி, கொங்குமண்டலத்து சின்னதாராபுரம் ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தலா 40 இடங்கள் வீதம் இவ்வாண்டு மட்டும் 80 இடங்களை தமிழக அரசு கொண்டுவந்துள்ளது. ஏற்கனவே இருந்து வந்த 50 இடங்களுடன் புதிதாக வந்துள்ள 80 இடங்களையும் (1½ மடங்குக்கு மேல்) சேர்த்து 130 இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உட்பகுதிகளில் தெலுங்கு வழி ஆசிரியர் பயிற்சி வகுப்புகளை கொண்டு வந்துள்ள தமிழக அரசின் செயலைக் கைவிட வலியுறுத்துவதோடு நங்கவள்ளி தமிழ்ச்சங்கம் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழுரிமைக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய இயக்கங்கள், தமிழ்ச்சங்கங்கள் பிற இயக்கங்களும் இந்த பிரச்சனையை கவனித்து நடவடிக்கை எடுக்குமாறு நங்கவள்ளி தமிழ்ச்சங்கம் கோருகிறது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தமிழர் கண்ணோட்டம் உறுப்பினர் ஆகிவிட்டீர்களா!**
**ஆண்டுக் கட்டணம் ரூ.60/-**
**வாழ்நாள் கட்டணம் ரூ.600/-**
- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# உரைகல்

## டி.எஸ்.சொக்கலிங்கம்

இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியாளரும், இந்திய விடுதலைப் போராளியும், இதழியாளருமான டி.எஸ்.சொக்கலிங்கம் (1899-1966) பற்றிய இச்சிறுநூல் அவரது நூற்றாண்டையொட்டி வெளிவந்திருக்கிறது. அறிமுகம், அரசியல், இதழியல், இருட்டடிப்பு எனும் நான்கு உட்பிரிவுகள் கொண்டிருக்கிறது.

சொக்கலிங்கம் 'தினமணி' நாளேட்டின் முதல் ஆசிரியர், 'மணிக்கொடி' யைத் தொடங்கியவருள் ஒருவர், லியோடால்ஸ்டாயின் 'போரும் வாழ்வும்' என்ற புகழ்பெற்ற புதினத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் என்பன போன்ற தகவல்கள் அவரின் தனித்துவத்தை உணர்த்தும்.

ஜனநாயக சோசலிசக் கொள்கையாளரான சொக்கலிங்கம் பொதுவுடைமை இயக்கத்தைக் கடுமையாக வெறுத்தவர், காங்கிரஸ் கட்சியின் பார்ப்பனர் அல்லாதார் பிரிவைச் சேர்ந்தவர் 1945 இலிருந்து காமராஜரை முழுமையாக ஆதரித்தவர்.

ஒரு கட்டத்தில் (1943) 'தினமணி' முதலாளி கோயங்காவைத் தேசியப் போர்வையில் உலவும் 'மார்வாரி' முதலாளியாக இனங்காட்டியிருக்கிறார் சொக்கலிங்கம் (பக்.37,38 & 54,55). புதுமைப்பித்தன் முன்னரே இதனைச் சொல்லியிருப்பதையும் நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார் (பக்.76).

மொழி வழி மாநிலப் பிரிவினைக்கு முன்பே சென்னை மாகாண முதல்வராயிருந்த பிரகாசம் ஆந்திர முதலாளிகளுக்கு ஆதரவாகவும், தமிழ் முதலாளிகளுக்கு எதிராகவும் செயல்பட்டதைச் சொக்கலிங்கம் புலப்படுத்தியுள்ளார் (பக்.39,40)

மொத்தத்தில் இந்தியத் தேசிய வாதியாகவும் பாப்பனரல்லாத தமிழராகவும் ஒரு சேர இயங்க முயன்ற நடுத்தரவர்க்க அறிவாண்மையாளராக சொக்கலிங்கத்தின் ஊசலாட்டங்களையும், சமரசங்களையும் நூலாசிரியர் முனைவர் பா.மதிவாணன் நம்பகமான ஆதாரங்கள் கொண்டு தொகுத்திருக்கிறார். இந்திய, தமிழக அரசியல், தமிழ் இதழியல், தமிழ் இலக்கியத் துறைகளில் ஆர்வமுள்ளோர் படிக்கத்தக்கதொரு நூல் இது. அதிகமுள்ள அச்சுப் பிழைகளைத் தவிர்த்திருக்க வேண்டும்.

-அமரன்

நூல்: **டி.எஸ்.சொக்கலிங்கம் - அரசியல், இதழியல் ஆசிரியர்.** முனைவர். பா. மதிவாணன்.அருளரசு வெளியீட்டகம், 367. மேலவீதி, தஞ்சாவூர் - 613 009. விலை. ரூ.25/-

## மக்கள் கவிஞர் - தனித்தன்மைகள்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் - தமிழ்த் திரைப்படப் பாடல் வரலாற்றில் சுமார் 10 ஆண்டுகளைப் புதுமைப்படுத்தியவர். இதுவரை அவரது பாடல்கள் பற்றி பல்வேறு ஆய்வு நூல்கள் வந்துள்ளன. அவை பட்டிமன்றங்களில் பேசப்பட்டும் வருகின்றன. 'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் தனித் தன்மைகள்' எனும் தலைப்பில் மூன்று இயல்களாகப் பிரித்து ஆய்வு செய்துள்ளார் முனைவர் கி. செம்பியன். சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், இக்கால இலக்கியம் எனப் பல்வேறு தமிழ் இலக்கியத் திறனாய்வு நூல்களின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு பட்டுக்கோட்டையாரின் பாட்டுத்தளத்தை வலிமைப்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.

முதல் தலைப்பில் மனித முயற்சியின் அவசியத்தை வலியுறுத்தி விதிப்படி (ஊழ்) வாழ்வு என்ற பழங்கருத்தை பட்டுக் கோட்டையார் பாடல் வரிகளில் எங்ஙனம் மறுத்துள்ளார் என்றும் இரண்டாவது தலைப்பில் கல்வியறிவின்மையால் ஏற்படும் மூடப்பழக்கங்களையும், முதலாளித்துவச் சுரண்டல்முறைகளையும், மூன்றாவது தலைப்பில் உழைக்கும் மக்களின் பன்முகத்தன்மைகளையும் பட்டுக்கோட்டையார் படம் பிடித்துள்ளதை தெளிவாகக் காட்டியுள்ளார். எனினும் பட்டுக்கோட்டையாரின் திரைப்படப் பாடல்கள் தமிழக மக்களிடம் ஏற்படுத்தியதாக்கம் அவரின் சமகால திராவிட இயக்கத்தின் இயக்கங்களின் வளர்ச்சி, பாரதி, பாரதிதாசன், பொதுவுடைமை இயக்கத்தின் ஆளுமையுடன் சேர்த்துப் பார்க்கப் படல் அவசியம்.

-அமரன்

நூல் : **மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் தனித்தன்மைகள்** முனைவர் சி.செம்பியன், திங்கள் பதிப்பகம், செம்பனார் கோவில் - 609 309 விலை. ரூ.40/-



படிப்பகம்

www.padippakam.com

# அறிவிக்கப்படாத அவசரநிலைப் பிரகடனமா? தோழர்கள் இராசேந்திர சோழன் பா. கல்யாணி கைது!

டிசம்பர் 6 ம் தேதி அசம்பாவிதங்கள் நேராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்கிற பெயரில் காவல் துறை மேற்கொண்ட கைதுகளில் அப்பாவி இஸ்லாமிய மற்றும் தலித் மக்கள் பலரும் பாதிக்கப்பட்டனர்.

எனவே, பல்வேறு அமைப்புகள் சார்பில் இதைக் கண்டிக்கும் வகையில் 2.12.98 புதன் அன்று மாலை விழுப்புரம் இராம கிருஷ்ணா தங்குமிடம் அறை எண் 135 ல் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி சில தீர்மானங்கள் இயற்றப்பட்டு பத்திரிக்கையாளர் சந்திப்பும் நடத்தப் பெற்றது.

இக்கூட்டம் நடந்து முடிந்த கையோடு அதே இடத்தில் 26 தமிழர் உயிர் காப்பு நிதியையொட்டி தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் விழுப்புரம் -கடலூர் மாவட்டக் கூட்டம். முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் கலைந்து செல்ல இரண்டாவது கூட்டத்தின் உறுப்பினர்கள் புதிதாக சிலர் வந்து சேர்ந்தனர். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே விழுப்புரம் நகரக் காவல் உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் உளவுப் பிரிவு அதிகாரிகள் புடை சூழ காவல் துறையைச் சார்ந்தவர்கள் அறையைச் சூழ்ந்து கொண்டனர்.

முதல் கூட்டம், இரண்டாவது கூட்டம் இரண்டிலும் அங்கம் வகித்த தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வட மாவட்டச் செயலாளர் தோழர் இராசேந்திர சோழன், மக்கள் கல்வி இயக்கம் பேராசிரியர் பா. கல்யாணி ஆகிய இருவரும், காவல் துறையின் வருகைக்கு காரணம் கேட்க , காவல் துறையினர் 6ம் தேதியையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்ய வந்திருப்பதாகக் கூறினர்.

தீர்மானம் நிறைவேற்றி பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்த்தியது குற்றமா? நாட்டில் அடிப்படை சனநாயக உரிமைகளே இல்லாமல் போய்விட்டதா? .அரசமைப்புச் சட்டப் பிரிவு 19 வழங்கியுள்ள உரிமைகள் என்னாயிற்று? என்று வாதிட்டும் பயனில்லை.

"எங்கள் மேல் வருத்தப்படாதீர்கள் சார். மேலிடத்து உத்தரவு. நாங்கள் வெறும் அம்புகள்" என்றார் நகரக் காவல் ஆய்வாளர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றவர்கள் நகரக் கல்வி மக்கள் மேம்பாட்டுக்குழுத் தோழர் மு. கந்தசாமி, பண்ருட்டி வழக்கறிஞர் சேட்டு, திண்டிவனம், தமிழேந்தி, சரவணப்பெருமாள், விழுப்புரம் பாலமுருகன், கடலூர் ரமேஷ், நெல்லிக்குப்பம், ராவணன் ஆகியோரையும் சேர்த்து ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு நகரக் காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர்.

வெறும் வெள்ளைத் தாளில் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, காவல் கண்காணிப்பாளர் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகச் சென்றுள்ளதால் நள்ளிரவு அவர் வந்த பிறகே குற்றப்பிரிவுகள் தீர்மானிக்கப்படும் எனப்பட்டது.

மறுநாள் காலை குற்றவியல் நடைமுறைச் சட்டம் 151, குற்றவியல் விதி திருத்தச் சட்டம் 7(1)A இந்திய தண்டனைச் சட்டம் 120 B ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து, நடுவர் நீதிமன்றம் கொண்டு சென்றனர்.

"போடாதே போடாதே பொய் வழக்கு போடாதே, பறிக்காதே பறிக்காதே கருத்துரிமையைப் பறிக்காதே மறுக்காதே மறுக்காதே சனநாயக உரிமையை மறுக்காதே" முதலான முழக்கங்களை எழுப்பி கைதானர்கள் நடுவர் மன்றம் வர, நடுவர் பெயர்களை விசாரித்து 15 நாள் காவலில் வைப்பதாக உத்தரவிட்டார்.

கைதானவர்கள், முதல்நாள் நடந்த சம்பவத்தை அப்படியே விளக்கமாக சித்தரித்து இரவே



படிப்பகம்

www.padippakam.com

எழுதி தயார் செய்து வைத்திருந்த மனுவை நடுவரிடம் தந்து, ஏற்கெனவே தோழர் பெ.மணியரசன் சென்னையில் கைதான வழக்கில் தோன்றி வாதிட்ட வழக்கறிஞர் அரி பரந்தாமனின் கூற்று ஒன்றை நினைவு படுத்தி, நீதி மன்றங்கள் வெறும் காவல் வைப்பு யந்திரங்களாகச் (Remanding machine) செயல்படக் கூடாது. முதல் தகவல் அறிக்கையின் நம்பகத் தன்மையை வைத்து அதன் தகுதி அடிப்படையிலும் நடுவர்களின் விரும்புரிமை அதிகாரத்தின் (Discretionary Power) அடிப்படையிலும் செயல்பட வேண்டும். நாங்கள் எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடாதவர்கள் என்பதால் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கைதானவர்கள் வாதிட, மனுவைப் படித்துக் கொண்டிருந்த நடுவர் சற்று திகைத்து, பிணையில் விட முடியாத பிரிவுகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளதால் இப்போதைக்கு ஒன்றும் செய்ய முடியாது என்றாலும் இதையே பிணை மனுவாக ஏற்றுத் தேதி போடுகிறேன் என்று தேதி குறிப்பிட்டார்.

கைதானவர்கள் அனைவரும் கடலூர் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுக்கு நடவடிக்கை விலக்கல் கிடையாது என தகவல் வர புதன்கிழமை 9.12.98 அன்று பிணை எடுத்து தோழர்கள் அனைவரும் வெளிவந்துள்ளனர்.

## கைதுக்கு கண்டன ஆர்ப்பாட்டங்கள்

மயிலம் டிசம்.3 விழுப்புரம் நடுவர் நீதி மன்றத்தில் முழக்கம் தந்து, கைதானவர்களை சிறைக்கு அனுப்பி வைத்த கையோடு மயிலத்தில் திரண்ட சுமார் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பேருந்து நிறுத்தம் அருகில் கூடி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். தோழர் ம. பாபு உரையாற்றினார்.

## தஞ்சை நகரம்

8.12.98 அன்று தஞ்சை பழைய பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு தோழர் பழ. இராசேந்திரன் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர் பெ. மணியரசன் கண்டன உரை நிகழ்த்தினார். கொட்டும் மழையிலும் குடைப்பிடித்துக் கொண்டு ஏராளமான தோழர்கள் கண்டனக் குரல் எழுப்பினர்.

## செங்கிப்பட்டி

பூதலூர் ஒன்றிய த.தே.பொ.க. சார்பில் 8.12.98 அன்று செங்கிப்பட்டியில் கண்டன ஆர்ப்பாட்டம் தோழர். ஆ. சண்முகம் (ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை நடைபெற்றது. தோழர்கள் க. பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர், த.தே.பொ.க.) குழ. பால்ராசு, ரெ. கருணாநிதி, ப. இமான்சேகர் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

## சோத்துப்பாக்கம்

8.12.98 அன்று சோத்துப்பாக்கம் கூட்டுச் சாலையில் தோழர். அ. கோவிந்தசாமி (கிளைச்செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு.வேதாச்சலம் (தமிழக பொருளாளர் த.இ.மு.) இனியன், மூர்த்தி(அகிலி கிளைச்செயலாளர், த.இ.மு.) ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

## குடந்தை

12.12.98 சனிக்கிழமை குடந்தை காந்தி பூங்கா அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் சா.பேகன் (கிளைச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை வகித்தார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் துரை பெரியசாமி (நெறியாளர் , அறிவியல் தமிழர் இலக்கிய மன்றம்) அரங்க. கார்வேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### *தஞ்சை நகராட்சியைக் கண்டித்து தமிழக இளைஞர் முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்*

*தஞ்சை புதிய, பழைய பேருந்து நிலையங்களைச் சீரமைக்காத நகராட்சியைக் கண்டித்தும், புதிய நகரப் பேருந்து நிலையத்தில் இலவசக் கழிவறை மற்றும் குடிநீர் வசதி செய்து தரக் கோரியும் தஞ்சை பழைய பேருந்து நிலையம் எதிரில் நகர த.இ.மு. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு த.இ.மு. நகரத் தலைவர் தோழர். ப. சந்திரசேகர் தலைமை தாங்கினார். தோழர்கள் க. பழநிமாணிக்கம் , த.கா. பரமசிவம், பழ. இராசேந்திரன், நா. வைகறை, இராசு. முனியாண்டி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். தோழர் ஆ. வேலாயுதம் நன்றி கூறினார்.*



படிப்பகம்

www.padippakam.com

# தியாகு கட்டுரையும் இறைக்குருவனார் மறுப்பும் சில விளக்கங்கள்

- பெ. மணியரசன்

'நந்தன் வழி' இதழில் தோழர் தியாகு எழுதிவரும் 'விலங்கிற்குள் மனிதர்கள்' தொடரில் 'அறுக்கப்பட்ட செங்கல்' என்ற தலைப்பில் திசம்பர் 1-15,98 இதழில் அவர் எழுதியதற்கு தென்மொழி (திசம்பர் 1998) இதழில் புலவர் இறைக்குருவனார் அவர்கள் மறுப்பு எழுதியுள்ளார்கள்.

"... 'தென்மொழி,' 'உலகத் தமிழ்க்கழகம்' முதலானவற்றையும் மொழி ஞாயிறு பாவாணர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் முதலானோரையுங் குறித்து அன்பர்களிடையே ஐயமும் திரிபும் நிகழுமாறு உண்மைக்கு வேறாகவும் மாறாகவும் பல செய்திகளைத் தாங்கியிருத்தலால் ஈண்டு அது பற்றிய விளக்கம் இடம் பெறுவது இன்றியமையாததாகி விட்டது" என்று முன்னுரை கூறி புலவர் இறைக்குருவனார் அக்கட்டுரையை எழுதியுள்ளார்.

தியாகு கட்டுரை எனது தொடக்ககால தமிழிய மற்றும் அரசியல் செயல்பாடுகள் குறித்து எழுதப்பட்டது. என்னிடமும் வேறு சிலரிடமும் செய்திகளைக் கேட்டுத் திரட்டிக் கொண்டுதான் தியாகு எழுதினார். எனவே இக்கட்டுரை மீதான விமர்சனத்திற்கு நானும் விடைசொல்ல வேண்டியிருக்கிறது.

புலவர் இறைக்குருவனார் குறிப்பிடுவது போல் 'தென்மொழி' பற்றிய விமர்சனம் எதுவும் தியாகுவின் கட்டுரையில் இடம் பெறவில்லை. உலகத் தமிழ்க் கழகம் மொழி ஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் குறித்த விமர்சனங்கள் தியாகுவின் கூற்றாக இல்லாமல் எனது கருத்துகளாகவே பதிவாகியுள்ளன.

அவை யாவை?

1. பாவாணர், உலகத் தமிழ்க் கழகம் என்ற தமிழ்த்தேசிய அரசியல் இயக்கத்தின் தலைவராக விளங்கியபோதும் முழுக்க முழுக்க மொழி தொடர்பான செய்திகளுக்கே முன்னுரிமை தருகிறார். தமிழ்த் தேசிய விடுதலைக்கான அரசியல் இயக்கமாக அதைச் செயல்படுத்துவதற்குரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவில்லை என்ற விமர்சனம் அப்போது எனக்கிருந்தது. (நான் 1968 திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த உலகத் தமிழ்க் கழக அமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் வாய்ப்பையும் பெற்றவன்.

பரமக்குடியில் 1969 ஆம் ஆண்டு திசம்பர் 27,28 நாட்களில் நடந்த உ.த.க. முதல் மாநில மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். அம்மாநாட்டில் தலைமை உரையாற்றிய பாவாணர் சென்னைப் பேரகர முதலியில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி வரும்போது ஒரு கட்டத்தில் ஆவேசமாக, சென்னை அகர முதலியைத் திருத்திவிட்டால்,நமது உலகத் தமிழ்க் கழகத்தையே கூட கலைத்து விடலாம் என்று கூறினார். இது உண்மை. நான் காதாரக் கேட்ட செய்தி மற்றவர்களும் கேட்டிருப்பார்கள்.

நான் கூறிய மேற்கண்ட செய்தியைத்தான் தியாகு தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்கூற்றைப் புலவர் இறைக்குருவனார் மறுக்கிறாரா இல்லையா என்பதை அவரது தென்மொழிக் கட்டுரை மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியவில்லை அவர் கூறுவதாவது:

" 'சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியின் சீர் கேடு' என்று ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளார் பாவாணர். அதைத் திருத்தி விட்டால் உ.த.க.வைக் கலைத்து விடலாம் என்பது அதன் அழுத்தத்தைக் காட்டுவதற்கேயன்றி வேறன்று.

"தமிழர் என்னுஞ்சொல் 'விளிம்பில்லாத தீர்த்தப் பாத்திரம்' என்று சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் பொருள் எழுதப்பட்டுள்ளதைப் பாவாணர் கூறியது உண்டேனும், பரமக்குடி மாநாட்டில் அதைச் சுட்டி அவர் பேசவேஇல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

"அவ்வுரையிலேயே 'இப்படியே போனால் நாம் இன்னும் பத்தாண்டில் ஆட்சியைப் பிடித்து விடலாம்' என்று பாவாணர் கூறினார். அது யாருக்கும் நினைவில்லை போலும்"

"உ.த.க.வைக் கலைத்து விடலாம் என்பது அதன் அழுத்தத்தைக் (அகர முதலியைத் திருத்துவது பற்றியது பெ.ம) காட்டுவதற்கேயன்றி வேறன்று" என்று புலவர் இறைக்குருவனார் கூறுகிறார். இவ்விடத்தில், பாவாணர் அவ்வாறு கூறினார் என்பதை ஏற்றுக் கொண்டு அக்கருத்தில் குறையில்லை என்று , இறைக்குருவனார் சொல்வது போல் தெரிகிறது. தமிழ் என்னும் சொல்லுக்கு விளிம்பில்லாத தீர்த்தப்பாத்திரம் என்று மேற்படி அகர முதலியில் பொருள் எழுதப்பட்டுள்ளதை பாவாணர் கூறியது உண்டு எனினும் பரமக்குடி மாநாட்டில் அது பற்றி பேசவில்லை என்கிறார் இறைக்குருவனார்.

உ.த.க.வைக் கலைத்துவிடலாம் என்பது அழுத்தத்தைக் காட்டுவதற்கேயன்றி வேறன்று என்று கூறி இறைக்குருவனார் அக்கூற்றையும் ஆதரிக்கிறார். தமிழர் என்பதற்கு விளிம்பில்லாத தீர்த்தப்பாத்திரம் என்று சென்னைப் பல்கலை அகர முதலியில் பொருள் கூறியிருப்பதைப் பாவாணர் சுட்டிக் காட்டியிருக்கிறார் ஆனால் அது குறித்து பரமக்குடி மாநாட்டில் பேசவில்லை என்கிறார் இறைக்குருவனார்.

மேற்கண்ட இரு செய்திகளையும் (உ.த.க.வை கலைப்பது விளிம்பில்லா தீர்த்தப் பாத்திரம்) முறையேஆதரிக்கிற மற்றும் ஏற்றுக் கொள்கிற அவர், உ.த.க.வையும் பாவாணரையும் ஐயம் திரிபு ஏற்படுமாறு உண்மைக்கு வேறாகவும் மாறாகவும் தியாகு எழுதிவிட்டார் என்று வறுத்த முறுவதில் என்ன ஞாயம் இருக்கிறது.

"இப்படியே போனால் இன்னும் பத்தாண்டில் ஆட்சியைப் பிடித்துவிடலாம்" என்றும் பரமக்குடிமாநாட்டில் பாவாணர் பேசினார். இது குறித்தும் தியாகுவிடம் கூறியிருந்தேன். ஓர் இடத்தில் அமைப்பைக் கலைத்து விடலாம் என்றும் இன்னோர் இடத்தில் பத்தாண்டில் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்றும் பேசிய பாவாணர் மொழி ஞாயிறாக விளங்கினார். ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பின் தலைவராக அவரைக் கருதி, அதனால் ஏமாற்றம் அடைந்தது எங்கள் குறையே.

2. அடுத்து பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறித்து.

திருக்காட்டுப்பள்ளி புதுச்சத்திரம் பயணிகள் விடுதியில் பெருஞ்சித்திரனாருடன் நான் விவாதம் செய்யும் போது, உ.த.க.அரசியல் பொருளியல் கொள்கைகளுக்கு உரிய இடம் வழங்கவில்லை என்று கூறி அதையொட்டிய கருத்துகளைப் பேசினேன். அப்போது பாவலரேறு "தம்பி, உலகத் தமிழ்க் கழகம் அறுக்கப்பட்ட செங்கல். அதில் உங்கள் கருத்துகளைத் திணிக்க முடியாது" என்றார். இவ்வாறு அவர் கூறியது தவறு என்ற விமர்சனம் எதையும் தியாகு செய்யவில்லை. பாவலரேறு கூற்றை அப்படியே வெளியிட்டுள்ளார்.

பாவலரேறு அவர்களின் "அறுக்கப்பட்ட செங்கல்" கூற்றை இறைக்குருவனார் மறுக்கவில்லை. மாறாக அப்படிக் கூறியதில் என்ன தவறு, என்று கேட்கிறார்! என்ன தவறு என்பது ஒருபுறமிருக்கட்டும். பாவலரேறு கூறிய சொற்களை (அறுக்கப்பட்ட செங்கல்) அப்படியே வெளியிட்டுவிட்டு அது குறித்து எந்த விமர்சனமும் செய்யாத தியாகு, பாவலரேறு மீது ஐயமும் திரிபும் ஏற்படும்படி எழுதிவிட்டதாக இறைக்குருவனார் கூறுவதில் என்ன பொருத்தப்பாடு இருக்கிறது? "உண்மைக்கு வேறாகவும் மாறாகவும்" தியாகு என்ன கூறிவிட்டார்?

ஓர் அரசியல் விடுதலை இயக்கம் அறுக்கப்பட்ட செங்கல்லாக இருந்து விடக் கூடாது. விடுதலை என்ற இலக்கில் மாற்றமின்றி, சமூக மாற்றத்திற்கான உட்சேர்க்கைகளை புதிதாகச் சேர்க்க வேண்டியிருந்தால் சேர்த்துக் கொண்டுதான் அவ்வியக்கம் தன்னை செறிவும் வலிவும் மிக்கதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

"...அக்கழகம் தொடங்கிய ஓராண்டுக்குள்ளாகவே, தாம் உறுப்பினரான சில மாதங்களிலேயே அதன் அடிப்படைக் கொள்கைகளையே **மாற்ற வேண்டும்** (அழுத்தம் எனது) என்று உறழாடுவது ஏற்கத்தக்கதா? திரு மணியரசன் அவர்கள் ,தாம் குடிபுகுந்த (?) பொதுவுடைமைக் கட்சியில் அவ்வாறு வாய் திறக்க வேணும் முடியுமா? என்று இறைக்குருவனார் கேட்கிறார்.

நான் பாவலரேறு அவர்களிடம் வாதிட்டது அடிப்படைக் கொள்கைளை **மாற்ற வேண்டும்** என்று அல்ல. மனதளவில் உ.த.க. தலைமை ஏற்றுக் கொண்டுள்ள தமிழக விடுதலைக்கு உரிய அழுத்தம் தரவேண்டும்; பொருளியல் நிகரமை (சமதர்மக்)



படிப்பகம்

www.padippakam.com

கொள்கையை உ.த.க.வின் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். என்பவை மட்டுமே! புதிய அமைப்பு உருவாக்கக் கட்டத்தில் இருந்தபோது தெளிவான கொள்கைகளை வகுத்துக் கொள்வது சரியாக இருக்குமல்லவா? இயக்கம் தொடங்கிய ஓராண்டு உறுப்பினராகச் சேர்ந்து சில மாதம் என்ற அம்சங்கள் ஓர் இயக்கத்தின் கொள்கை வகுப்பதில் கருத்துக் கூற- வாதிடத் தடைகள் இல்லையே.

குடிபுகுந்த(?) பொதுவுடைமைக் கட்சியில் இவ்வாறு வாய்திறக்க வேணும் முடியுமா என்று இறைக்குருவனார் கேட்கிறார். வாய்திறக்க என்ன, வாதாடவே, எனக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரப்பூர்வமாக உள்கட்சி ஜனநாயகம் வழங்கியது சி.பி.எம். கட்சியில் சேர்வதற்கு முன்னேயும் அதனுடன் வாதிட்டேன். சேர்ந்து செயல்பட்ட போதும் வாதிட்டேன். அது இந்திய தேசிய ஆதிக்க வாதத்திற்குத் துணை போகிறது, தமிழ்த் தேசியத் தன்னுரிமையை ஏற்க மறுக்கிறது, சமூக நீதிப் பார்வை இல்லை, ஒரு தேர்தல் கட்சியாக செயல்படுகிறது என்பன போன்ற காரணங்களால் நாங்கள் வெளியேற முடிவுசெய்து உட்கட்சிப் போராட்டம் நடத்தினோம்; அதன்போக்கில் நாங்கள் வெளியேற்றப்பட்டோம்.

"... பாவலரேறு பெருஞ்சித்திரனாரிடம் குறைகாணத் தொடங்கினார்கள்" என்று தியாகு தனது கட்டுரையில் என்னையும் வேறுசில தோழர்களையும் குறித்து எழுதியிருந்தார்.

அது உண்மைதான். பாவாணர் மொழி அறிஞர், அகவையும் அதிகம். பாவலரேறு தளபதி; தமிழக விடுதலை அரசியல் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தத் தகுதியானவர் என்று கருதினோம். அதற்கேற்ப பாவலரேறு அவர்களின் செயல்கள் அணுகுமுறைகள் அமையவில்லையே என்ற வருத்தம் எங்கட்கிருந்தது.

இதே மன வருத்தத்தைப் பாவலரேறு மறைவதற்கு சில மாதங்களுக்கு முன், அவர் தஞ்சை வட்டம் சாணூரப்பட்டியில் புலவர் இரத்தின வேலவன் அன்னையார் படத்திறப்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்த போது, தனித்துப் பேசும் சூழல் ஏற்பட்ட நிலையில் அவரிடம் நான் சுட்டிக் காட்டினேன். அதற்கு அவர் ஒரு சில காரணங்களைச் சொன்னார்.

பாலரேறு மறைந்தபோது, அவரது உடல் கிடத்தப்பட்ட நிலையில் அவரது இல்ல வாயிலில் இரங்கல் உரை நிகழ்ந்து கொண்டிருந்தது. அப்போது, முனைவர் இளவரசு, பாவலரேறு பெருமைகளைப் பேசிவிட்டு, பாவலரேறு இன்னும் சரியாகத் தலைமை தாங்கியிருந்தால், தமிழ், தமிழன் பெயரால் சந்தர்ப்பவாத இயக்கங்கள் இங்கு வெற்றி பெற்றிருக்க முடியாது என்ற கருத்தை மெல்லிதாக உட்பொருளாக வெளிப்படுத்தினார்.

என் எண்ணம் இன்றும் அதுதான். உலகத் தமிழ்க் கழகம் அதன் தலைமையால் சரியாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் 1968 க்குப்பிறகு அதற்குப் பெருகி வந்த செல்வாக்கிற்கு, அது, தி.மு.க, அ.தி.மு.க. போன்ற சந்தர்ப்பவாத இயக்கங்களுக்கு மாற்றீடான அசலான தமிழ்த் தேசிய இயக்கமாக வளர்ந்திருக்கும்.

பாவலரேறு தலைமை தாங்கத் தகுதியானவர் என்றும் அவர் தலைமையின் கீழ் செயல்படுவோம் என்றும் என்னைப் போன்றவர்கள் அன்று முடிவிற்கு வந்து, அது அவ்வாறு நிறைவேறாத நிலையில் அவர் மீது வருத்தம் ஏற்பட்டது.

மற்றபடி பாவலரேறு தன்னலக்காரர் என்றோ, பாசாங்குக் காரர் என்றோ அல்லது இதுபோன்ற வேறு கெட்ட குணங்கள் அவரிடம் இருப்பதாகக் கருதியோ அவர் மீது நாங்கள் குறை காணவில்லை.

தமிழக அரசியலில் தலைமை ஏற்கும் வரலாற்றுப் பாத்திரத்தை வகிக்கும் வாய்ப்பு அவருக்கும் உ.த.க.வுக்கும் இருந்தது. அதை அவர் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள வில்லை. இழப்பு தமிழர்களுக்கே!

கொடுஞ் சட்டங்களும் கடும் தண்டனைகளும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கொள்கைகளை மாற்றிவிடவில்லை. இறுதிவரை தமிழக விடுதலைக்குக் குரல் கொடுத்தார். பிள்ளைகளுக்கெல்லாம் சாதி மறுப்புத் திருமணம்! குடும்பமே தமிழ்த் தேசிய அரசியலில்!

தமிழ்த் தேசிய வரலாற்றில் பாவலரேறு அவர்களுக்குத் தனி இடம் உண்டு. அவரைத் தமிழ்த் தேசியத்தின் ஆசான் என்று தான் இன்றும் நான் கருதுகிறேன. திறனாய்வுக்கு அப்பாற்பட்ட தலைவர்கள், ஆசான்கள் யாரும் இல்லை என்ற வகையில் அவர் மீது எனது திறனாய்வை வைத்துள்ளேன்.



படிப்பகம்

www.padippakam.com

3. உ.த.க.வை விட்டு வெளியேறியவர்கள் எல்லாம் செய்து நிறைவேற்றியது என்ன என்று கேட்கிறார் இறைக்குருவனார். உ.த.க.வை விட்டுப் பாவலரேறு அவர்களே வெளியேறி உ.த.மு.க.வை தொடங்கிய நிலையில், உ.த.க.வே செயல்படும் அமைப்பாக இல்லாமற் போய் விட்ட நிலையில், உ.த.க.வின் தமிழ், தமிழ் இனக் கொள்கைகளை தனக்குரிய வகையில் வலியுறுத்தும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியை நாங்கள் இயக்கி வருகிறோம் **"தமிழ்த் தேசத் தன்னுரிமை"** என்ற முழக்கத்தை தமிழக அரசியல் அரங்கில், கவனிக்கத்தக்க முழக்கமாக மாற்றியதில் நாங்களும் முக்கியப் பங்காற்றியிருக்கிறோம்.

4. இறுதியாக, இறைக்குருவனார் அவர்கள் கட்டுரையைப் பின்வருமாறு முடித்துள்ளார்.

"திரு தியாகு அவர்கள், இக்கட்டுரையின் மூலம் அவர் எழுதும் பிறவற்றின் மேலும் நமக்கு ஐய மெழச் செய்து விட்டார்.

கல்லாத மேற்கொண்டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் (திருக்.845)"

"புல்லறிவாண்மை என்ற அதிகாரத்தின் கீழ்வரும் இக்குறளின் பொருள்:

"புல்லறிவாளன் தனக்குப் பயிற்சியில்லாத காரியங்களையும் பயிற்சி பெற்றவன் போல் மேற்கொண்டு கெடுத்து விடுவான். அதனால் அவன் நன்றாகப் பயின்று திறமையோடு செய்யத் தெரிந்துள்ள வேலையிலும் அவனைப் பிறர் சந்தேகிப்பார்கள்".

நாமக்கல்லார் உரை

"உ.த.க. வைக் கலைத்துவிடலாம்" என்ற பாவாணர் கூற்றையும் "அறுக்கப்பட்ட செங்கல்" என்ற பாவலரேறு கூற்றையும் இறைக்குருவனார் மறுக்கவில்லை. அக்கூற்றுகள் குறித்த பார்வையில் இறைக்குருவனார் வேறுபடுகிறார். தியாகு ஒன்றும் பொய் கூறிவிடவில்லை. இல்லாததை இட்டுக் கட்டி கூறி விடவில்லை. இதில், தியாகுவின் புல்லறிவாண்மை எங்கே வெளிப்படுகிறது.

பாவலரேறு அவர்கள் மறைந்து விட்ட நிலையில் அவர் இருந்த இடத்தில் வைத்து இறைக்குருவனார் அவர்களை நாங்கள் பார்க்கிறோம். இறைக்குருவனார் இந்த மறுப்புக் கட்டுரை எழுதியதால் அவர் மீதான இந்தப் பார்வை மாறாது. ஏனெனில் புலவர் இறைக்குருவனார் அதற்குத் தகுதியானவர்.

"விரிவான வரலாறு இனித் தொடரும்" என்று அவர் கூறியுள்ளார். இந்த விவாதம் அவர் விரிவாக எழுதப் பயன்பட்டால் அது தமிழுக்கும் தமிழர்க்கும் நன்மை செய்ததாக அமையும். உ.த.க- உ.த.மு.க., தென்மொழி இயக்கம் ஆகியவை பற்றிய சரியான வரலாற்றுப் பதிவை புலவர் இறைக்குருவனார் அவர்களால் தரமுடியும். தொடக்கம் முதல் அவ்வியக்கத்தில் முன்னணிப் பாத்திரம் வகித்து வருபவர் அவர் ■

## *சிதம்பரம் கோவில்களில் தமிழ் அர்ச்சனை கோரி பட்டினிப் போராட்டம்*

*11.12.98 அன்று சிதம்பரம் மேல வீதியில் தமிழ் காப்பணி இயக்கத் தலைவர் பேராசிரியர் ச.மெய்யப்பன் தலைமையில் பட்டினிப் போராட்டம் நடந்தது. சிதம்பரம் நடராஜர் கோவில், தில்லை காளிகோவில் மற்றும் சிதம்பரத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யக் கோரி இந்த பட்டினிப் போராட்டம் நடத்தினார்கள்.*

*இந்த பட்டினிப் போராட்டத்தை தஞ்சைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ். அகத்தியலிங்கம் தொடங்கி வைத்து பேசினார்.*

*சிதம்பரம் வர்த்தகச் சங்க செயலாளரும் தமிழ்ப் பேரவை தலைவருமான இராம ஆதிமூலம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி. வெங்கட்ராமன், அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினர் வே. மணிவாசகன், பேராசிரியர் அழ. பழனியப்பன், திருக்கோவிலூர் சுந்தரம், புலவர் முருகேசன் இரா. சாரங்கபாணி, மயில் வாகனன், ப. அருள், கலியமூர்த்தி, கு. சிவப்பிரகாசம், நுகர்வோர் சங்கச் செயலாளர் சி.டி. அப்பாவு, பழ. சண்முகனார், சேவை சண்முகனார், திராவிடர் கழகப் பிரமுகர் சுந்தரமூர்த்தி, வெங்கடேசன் காப்பிப்பார் மூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டு தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பேசினார்கள்.*



படிப்பகம்

www.padippakam.com

## தோழர் வினோத் மிஸ்ரா மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) (லிபரேஷன்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வினோத் மிஸ்ரா மாரடைப்பால் 18.12.98 அன்று திடீர் மரணமடைந்தது அதிர்ச்சியை உண்டாக்கியது.

அக்கட்சியை மக்கள் திரள் அமைப்பாக மாற்றியதிலும், பீகாரில் பெருந்திரளாக விவசாயிகளைத் திரட்டி எழுச்சியுறச் செய்ததிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் பாதுகாப்பிற்காக ஆயுதந் தாங்கிய செம்படையை உருவாக்கியதிலும் தோழர் வினோத் மிஸ்ரா பங்கு முதன்மையானது.

அண்மையில் மறைந்த தோழர் நாகபூஷன் பட்நாயக்கை அடுத்து வினோத் மிஸ்ராவும் காலமானது அக் கட்சிக்குப் பேரிழப்பு.

தோழர் வினோத் மிஸ்ரா மறைவுக்கு த.தே.பொ.க. தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## சத்தியமங்கலத்தில் தமிழக இளைஞர் முன்னணி பொதுக் கூட்டம்

22.11.98 ஞாயிற்றுக் கிழமை சத்திய மங்களம் தமிழக இளைஞர் முன்னணி கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் நல். சுப்ரமணியம் (தமிழக துணைத்தலைவர் (த.இ.மு.) தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் தோழர் மா. தமிழினியன் (நகரச் செயலாளர் த.இ.மு.) வரவேற்புரையாற்ற, தோழர் கி.வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.தே.பொ.க.) சிறப்புரையாற்றினார். தோழர்கள் ச. அர.மணிபாரதி (த.தே.பொ.க. மாவட்டச் செயலாளர்) அ. இராமலிங்கம்(தமிழ் தமிழர் இயக்கம்) உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். தோழர் வெண்முகில் (நகரப் பொருளாளர் த.இ.மு.) நன்றி கூறினார்.

## தஞ்சை நகரில் புதிய ஆட்டோ ஓட்டுநர் சங்கம் தொடக்க விழா

7.12.98 அன்று தஞ்சை தங்கம் நகரில் ஆட்டோ ஓட்டுநர் சங்கம் தமிழக தொழிற்சங்க முன்னணி சார்பில் தொடங்கப்பட்டது. தோழர் சுவாமிநாதன் (சங்கத் தலைவர்) தலைமை தாங்கினார். தோழர் த.கா. பரமசிவம் (கௌரவத் தலைவர் ஆ.ஓ. சங்கம்) சங்கத்தின் கொடியினை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார். தோழர் பழ. இராசேந்திரன் சங்கப் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்து உரையாற்றினார். மற்றும் தோழர்கள் நா.வைகளை இராசு. முனியாண்டி ப. சந்திர சேகளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் கோ. நாராயணசாமி நன்றி கூறினார்.

## எல். இளையபெருமாள் அவர்களின் பவளவிழா

நெய்வேலி யில் சாதி ஆதிக்க எதிர்ப்புப் போராளி எல்.இ.பி. அவர்களின் பவளவிழா 18.12.98 முழுநாள் விழாவாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல்வேறு அரசியல் இயக்கத் தலைவர்கள், அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், என்.எல்.சி அதிகாரிகள் மற்றும் பல்வேறு தலித் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் பெ. மணியரசன் பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

அம்பேத்கர் விருது வழங்கிட தமிழக அரசு முடிவு செய்த போதும் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் பறையடித்து அறிவிக்கும் கண்மூடிப் பழக்கத்தினை தடைசெய்ய வேண்டும்; துண்டறிக்கை ஒலிப்பெருக்கி மூலம் அறிவிக்க தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். சாதி மறுப்புத் திருமணம் செய்ய விரும்பும் காதலர்கள் மீது கடத்தல் புகார் வரும்போது அவ் வழக்குகளை காவல் நிலையங்களில் விசாரணை செய்யக் கூடாது எனவும் அவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கப்படும் முறையில் தனிக் காவல் நிலையங்களை அமைக்க வேண்டும் என்பதுவும் தான் அவருடைய பணிக்கு உண்மையான பாராட்டு என்று கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com



# பொற்காலம்... வரும்!

- அமரன்

சாதித்... தீ
சந்துபொந்தெல்லாம்
பற்றிப்படர்கிறது...

தீயைவளர்க்கத் தெருவில்
சாதித் தலைவர் சபதம்
தந்துவட்டி கள்ளச்சாராயம்
கட்டபஞ்சாயத்து...
கொள்கைக் கூட்டணி
கச்சிதமாய்க் களத்தில் குதித்தது...

வெட்டு குத்து
கொல்லு கொளுத்து
கொந்தளிக்கும் கொலை வெறி...

கொழுந்துவிட்டு எறிந்தன
குடிசைகள்... குடிசையில்
குதிர் நெல்லும் தகரப்பெட்டியும்
ஒற்றையுடுப்பும் சட்டி பானையும்
உருவமழிந்தன...

கத்தலும் கதறலு மாகக்
காதைப்பிளந்தது ஓலம்...!

கண்ணில்பட்டது கண்டதுண்டமாக
கழுத்தறுத்த கைகள்...
களைத்து கைமாறி... மாறி
அசந்தது அரிவாளும்...

மாண்டது மனிதர்கள்
மட்டுமல்ல
மரம் செடி மாடு ஆடுகளும்

வெந்தவிந்த குட்டிச் சுவருக்குள்
கிண்டிக் கிளறித்
தகவலுக்குத்
தடயம் தேடும்
காவல்துறை...!

முன்னாள் இந்நாள்
முதல்வர்கள் அமைச்சர்கள்
அரசியல்... தலைவர்கள்
அனல் பறக்கும் அறிக்கைகள்
வழக்கம் போல் வானொலி
தொலைக்காட்சி செய்தித்தாள்...
மாநிலச் செய்தி மாலைச் செய்தி
பரபரத்தன...

கலவரத்தை அடக்கக் கண்டதும் சுட
காவல் துறை ...
காரணம் அறிய கமிஷன்!

உடைமை இழந்தவர்களுக்கு
அஞ்சுலிட்டர் மண்ணெண்ணெய்...
அஞ்சு கிலோ அரிசி...
அங்கம் இழந்தவர்களுக்கு
அய்யாயிரம்...
உயிர் ஒரு இலட்சம்... !
அமைதி திரும்பும்வரை அதிரடிப்படை
மக்களுக்கு...
மாமுல் வாழ்க்கை திரும்பியது.

கூட்டமாய்க் கூட்டுறவு அங்காடியில்
குடும்ப அட்டையுடன்
கொடுப்பதை வாங்க... மீண்டும்
அவரவர் அடையாளம் பார்த்து
அடித்துக் கொண்டார்கள்...

பொங்கித்தின்று
பொழுதைக் கழியுங்கள்
பொன்விழா கண்ட நாட்டில்
பொற்காலம் வரும்...!

இவர்களிடம் இழப்பதற்கு
இன்னும் இருப்பது சாதியமே...!
மாண்ட பின்னும் பிணத்தைப்
பிரித்தறிய ...

படிப்பகம்